உ

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத். 1. | 1910-௵ அக்டோபர் & நவம்பர்௴ | நெ. 6 & 7

## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய சந்தா நேயர்களே!

நமது பத்திரிகை ஆரம்பமாகி கடவுள் கிருபையாலும் "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்னும் வசனத்திற் கோரிலக்கியமாகவும், தஞ்சமென்றடைந்தவருக்குத் தளராப்பாது காப்பாகவும், தெய்வத்தமிழருமை குன்றாவண்ணம் தமிழற்கட்கோர் புகலிடமாகவும், பரோபகார சிந்தைக்கு உறைவிடமாகவும், தென்னிந்தியவாசிகட்கு ஓர் அணிகலமாகவும் விளங்கும்திருவாவடுதுறை ஆதீனம் மஹாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிக பண்டாரசன்னதியவர்களின் உபகாரத்தாலும், போஸ்டல் சூப்ரின்டெண்டெண்ட் ஸ்ரீமான், K. அமுர்தலிங்கம்பிள்ளையவர்களுடைய ஆதரணையினாலும், நாகை ஜென்ரல்ஸ்டோர் மிஸ்டர், R. ஸ்ரீனிவாசய்யங்காரவர்களுடைய அபிமானத்தாலும், ரெவினியு செட்டில்மென்ட் மிஸ்டர், A. நாராயணய்யங்கார் அவர்களுடைய விடாமுயற்சியாலும், உங்கள் அனைவரின் அன்புடைய ஆசீர்வசனத்தாலும், பாலபருவமுடைய நம் பத்திரிகை மாந்தம் முதலிய பிணிவாயிற் பட்டு பின்னடையாது, சுக்கிலபக்ஷ சந்திரன்போல் பிரகாசித்து வருகிறது. இது போலவே இனியும் செழுத்தோங்குமாறு பத்திரிகையின் அபிவிருத்தியைக்கருதி நாம் சில வெளியூர்களுக்குப்போக வேண்டியிருப்பதால், இம்முறை அக்டோபர், நவம்பர் இவ்விரண்டுமாத சஞ்சிகையையும் ஒருங்குசேர்த்து வெளியிட நேர்ந்திருக்கும் இத்தவறுதலுக்கு நாமே கவ்லுகிறோம். பத்திரிகையின் அபிவிருத்தியைக் கருதியவர்களும், அபிமானமிக்குள்ள நேயர்களும் பிழை பொறுப்பார்களென்று நம்புகிறோம்.

தென்னிந்தியாவில் இது போன்ற பல பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு பிரபலமாகாமல் பின்னடைந்து போனதின் காரணம் பத்திரிகாபிமானிகளின் கவனக்குறைவேயன்றி, பத்திராதிபர்களின் முயற்சிக்குறைவல்ல. ஜப்பான் தேசத்தில் 35-வருஷங்களுக்கு முன் ஒரே ஒரு சமாசாரப்பத்திரிகை இருந்தது. இப்போது 2000-பத்திரிகைகளுக்கு மேற்பட்டிருக்கிறதை உத்தேசித்தால், அத்தேச அபிவிருத்திக்குப் பத்திரிகையே ஓர்முக்கிய காரணமெனத்தோற்றுகிறது. ஜப்பானியரைப்போல் நந்தென்னிந்திய வாசிகளும், தேசாபிமானம் மேலிட்டு பத்திரிகைகளைப்பாதுகாக்கும் காலம் என்று வருமோ இதை எம்பிரானன்றி எவர் அறிவர்!

## கருப்பத்தில் சிசு வளருதல்.

மானிட தேகமானது சுக்கிலநாதக் கூட்டுறவால் உண்டாகிறதென்றும், * அச்சுக்கிலஸ்ரோணிதங்களில் கருப்பூச்சி என்னும் ஓர் கிருமி இருக்கிறதென்றும், இக்கிருமிகளே சிசுவுற்பத்திக்கு ஆதாரமென்றும் அனைவருமறிவர். அறியாதார்க்கு அடுத்தமுறை தொடுப்போம். அச்சுக்கிலக் கிருமியினால் கருவளர்ச்சி எங்ஙனம் உண்டாகிறதென்பதை இதனடியில் சங்கிரகமாகக் கூறுவாம்.

சுக்கிலக் கிருமியானது சுரோணித முட்டையில் சென்று கருவுயிர்த்த முதல்நாளில் சிசுவானது கண்ணுக்குத் தோன்றாத அணுவத்தனையாயிருந்தபோதிலும், விரைவில் வளரத்தொடங்கிப் பத்துநாளில் கடுகத்தனை பருமனும், பிசின் தன்மையுள்ளதுமாய்ப் பளிங்குபோல் தோன்றும். பன்னிரண்டாம் நாளில் மிளகளவு பெரிதாகி அதனுள்ளிருக்கும் நீரில் ஓர் வெள்ளைப் புள்ளி சற்று நீளமுள்ளதாய் கண்ணுக்குத்தோன்றும்.



3-வது வாரம்.

இருபத்தோராம் நாளில் அதாவது மூன்றாவது வாரப் இலந்தைப் பழப் பருமனாய் உருண்டை வடிவானது மாறி புழுவைப்போல் நாலு குண்டுமணி நிறையுள்ளதாய்த்தோன் றும் முப்பதாம் நாளில் பிண்டமானது சுண்டைக்காய்ப் பிரமாணமான புழுவாய் அரை அங்குல நீளமுள்ளதாய்த் தோன்றும். அன்றியும் ரத்த சரங்களாலாகிய அழகான சொற சொறப் புள்ளபோர்வைபோன்ற புறக்கவசத்தால் மூடப்பட்டிருப்பதுடன், உட்கவசமும் பனிநீரும் இதற்குள் உண்டு சரீரத்தைவிட தலை பெரிதாயிருக்கும்.

ஐந்து வாரத்தில் சரீரத்தைவிடச் சிரசு பெரிதாகவும், நேத்திரஸ்தானத்தில் இரண்டு புள்ளிகளுள்ளதாகவுந்தோற்றும், ஏழாவது வாரத்தில் நேத்திரங்களும் செவிகளுமுண்டாகி, அஸ்திகள், மூளை, ஈரல் முதலியவைகளின் குறிதோன்றிப்பிண்டம் முக்கால்அங்குல நீளமாகும்.

இரண்டாவது மாதத்தில் கண், காது. மூக்கு, வாய், நெற்றி, இருதயம், மூளை, ஈரல், கழுத்து முதலியவற்றின் குறிதோன்றிச் சரீரத்தில் மூன்றிலொருபாகம் சிரசாயிருக்கும். பிண்டம் எலிக்குஞ்சுபோல் ஒன்றரை அங்குல நீளமுள்ளதாயிருக்கும்.

* சுக்கிலம், புருஷனுடைய வெண்மையான இந்திரியம்.
ஸ்ரோணிதம் என்பது கன்னிகையின் சூரமநீர்.



3-வது மாதம்.

மூன்றாவது மாதத்தில் கண்ணிமையானது கண்ணை மூடியிருப்பது தெரியும். உதடுகள் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கும், பிண்டமானது, ஆண், பெண் என்று தெளிவாய்த் தெரியத்தக்கதாக, ஆண், பெண் உறுப்புகள் தோன்றும். கைகால்விரல்கள் நன்றாய்த் தெரியும். சரீரத்தில் இரத்தவோட்டமுண்டாகி இருதயம் பலக்க அடிக்கிறது கேட்கும். பிண்டத்தின் நீளம் நாலு அல்லது ஐந்து அங்குலம். நிறை இரண்டு முதல் நாலு அவுன்ஸ் வரையிருக்கும்.



4-வது மாதம்.

நாலாவது மாதத்தில் பிண்டத்திற்கு சிசுவென்று பெயராகும். நீளம் ஆறு முதல் எட்டு அங்குலம். நிறை ஏழு முதல் எட்டு அவுன்ஸ். தோல் ரோஜா புஷ்பம்போல் சிவந்து சதை வளர்ந்திருக்கும். கண், வாய், மூக்கு, முடி இவைகள் இருக்கும். இம்மாதத்தில் சிசுவானது தாயின் கர்ப்பத்தில் சுழன்றுகொண்டு வருவது தோன்றும். இக்காலத்தில் வெளியாகும் சிசு சில மணி நேரங்கள் உயிரோடிருக்கும்.



5-வது மாதம்.

ஐந்தாவது மாதத்தில் சிசுவின் நீளம் எட்டு முதல் பத்து அங்குலம். நிறை எட்டு முதல் பதினொரு அவுன்ஸ். இம்மாதத்தில் சிசுவின் தலை மற்றபாகங்களை விட கனதியாய்ப் போய்விடுவதால் தலை கீழாக மாறிவிடும்.



6-வது மாதம்.

ஆறாவது மாதத்தில் பன்னிரண்டரை அங்குல நீளமும் ஒரு பவுன் நிறையுமாயிருக்கும். சிரசு, கண்பட்டைகளில் உரோமம் தோன்றும்.



7-வது மாதம்.

ஏழாவது மாதத்தில் ஒவ்வொரு அவயவமும் பூர்த்தியாக வளர்ந்து முகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் முழுப் பாகமாய்த் துலங்குவதோடு, எலும்புகளெல்லாம் உறுதியாகிச்சிசு பூரணப்படும். நீளம் பன்னிரண்டு முதல் பதினான்கு அங்குலம். நிறை ஏறக்குறைய மூன்று பவுன். இக்காலத்தில் சிசுபிறந்து அதிகப்பத்திரமாய் பாதுகாக்கப்பட்

டால் பிழைத்துக்கொள்ளும். ஆனால் அதிக பலவீனமாயிருப்பதால் அதிக ஜலம்விட்டு ஸ்நானம் செய்விக்கமுடியாது. ஆனல் கடற்காளானை (Sponge) தண்ணீரில் தோய்த்து மெதுவாய் தேகத்தை சுத்தப்படுத்த வேண்டும். பால்குடிக்கிற நேரந்தவிர மற்ற நேரங்களிலெல்லாம் அமைதியாய்த்தூங்க இடங்கொடுக்க வேண்டும். மேலும் அவ்விதக் குழந்தைகளுக்குப்போதுமான அனல் உண்டாக்கக்கூடிய சக்தியில்லாதிருப்பதால் கோழியானது தன் குஞ்சுகளைத் தன் செட்டைக்குள் வைத்து அனலுண்டாக்குமாபோல் குழந்தையைக் கம்பளித்துணிகளில் (Flannel) சுற்றிதாயின் முன் கிடத்தவேண்டும். அல்லதுவேறொருவர் மடியில் வைத்து அனலுண்டாக்க வேண்டும்.

எட்டாவது மாதத்தில் சிசுவின் நீளம் பதினாறு முதல் பதினெட்டு அங்குலம். நிறை நாலு முதல் ஐந்து பவுன். சரீரமெல்லாஞ்சிவந்து ரோமத்துவாரங்கள் மிக நட்பமாக ஏற்பட்டு ரோமங்களும் சிறிய குறுத்துகளாகத் தோன்றும்.

ஒன்பதாவது மாதத்தில் சிசுவின் நீளம் பத்தொன்பது முதல் இருபத்தொரு அங்குலம். நிறை நாலு முதல் ஐந்து பவுன். சர்வாங்கங்களும் வளர்ந்து பருத்து வலுவேறி ரோமங்களெல்லாம் நன்றாய் வளர்ந்திருக்கும். சிசுவானது தன் இருகரங்களையும் மூன்னாலே குவித்து, தலையையும் கால்களையும் மடக்கி அண்ட வடிவமாக வளைந்து கொண்டு தலை கீழாய்ச் சராயு என்னப்பட்ட பையிலே அசைவாடிக்கொண்டும், அடிக்கடி நீண்டும், நிமிர்ந்தும், துடித்துக் கொண்டிருக்கும்.

ஆரம்பத்தில் சிசு மிகச் சிறிதாயிருப்பதால் ஷை நீரில் மிதந்து கொண்டு சில சமயம் தலை மேலாகவும், சில சமயம் கால் மேலாகவும் கிடக்கலாம். ஆனல் தலையானது சரீரத்தின் மற்ற பாகங்களைவிடக் கனதியாயிருப்பதால், அநேகமாய் தலை கீழும் சரீரம் மேலுமாகவே கிடக்கும். கடைசி மாதத்தில் சிசுவானது பெரிதாய் வளர்ந்து விடுகிறதினாலும், கருப்பையின் அகலமானது சிசுவின் நீளத்தைவிடக் குறைவாயிருப்பதனாலும், கீழ்நோக்கிய தலைமேல் போகமுடியாமல் அவ்விதமாகவே யிருந்துகொண்டு வளரும். ஜீவகாருண்யர் செய்திருக்கும் இவ்வித ஏற்பாட்டினால் பிரசவம் ஆரம்பிக்கும்பொழுது குழந்தை எளிதில் வெளிவரத்தக்க ஸ்திதியிலிருக்கிறது. ஏனெனில் சிசுவின் தலை பிரமதத்திலே வெளிவருவதால் தாய்க்கும் பிள்ளைக்கும் நன்மையுண்டு. கருப்பையின் இடம் அதிகச் சிறிதாயிருப்பதால் சிசுவானது கைகால்களை மடக்கிக்கொண்டு சுருண்டு கிடப்பதைப் பார்க்கிறோம். குழந்தை பிறக்கும்

சமயத்தில் தாயின் சரீரக்கட்டுகள் தளர்ந்து கருப்பை சுருங்கி நெருக்குவதால் தாய்க்கு வலியுண்டாகும். அது ஆரம்பத்தில் லேசாகவும் அதிக நேரத்துக்குப் பின்னும் வந்துகொண்டிருக்கும். பிற்பாடு நேரஞ்செல்லச்செல்ல கருப்பையானது அதிகமாய் நெருங்கிச் சுருங்குவதாலும், ஸ்திரீயின் அடிவயிற்றின் மாம்சத்தை சுருக்கித் தள்ளுவதனாலும், யோனித்துவாரம் விரிந்து கொடுப்பதனாலும் வலி அதிகரித்து அடிக்கடி உண்டாகும். அப்பொழுது பிள்ளையைச் சுற்றியிருக்கும் பை உடைந்து அதனுள்ளிருக்கும் நீர் வெளியாகும். சிறிது நேரத்திற்குள் சிசுவின் தலை தோன்றி குழந்தை பிறக்கும், அப்போது நஞ்சுக் கொடியும் மற்றுமுடைந்த ஜவ்வுகளும் வெளியேறும். அச்சமயத்தில் உடைந்த இரத்தக்குழாய்களிலிருந்து உதிரமானது தாராளமாய் வரும். பின்பு அதை நிறுத்தும்படி கருப்பை சுருங்குவதால் அவைகளுஞ் சுருங்கித் தம் ஸ்தானத்திற்சேரும். குழந்தை பிறப்பதற்குமுன் உண்டாகும் அகோரவலியை நீக்கும்பொருட்டு தற்காலத்தில் குளோரோபாரம் (Chloroform) என்னும் அவுஷதத்தைக் கொடுக்கப்பட்டு வருகிறது. இம்மருந்தை உபயோகிக்கக்கூடாதென்று அநேகர் தடுத்தபோதிலும், ஸ்திரீ ரத்னமாகிய **விக்டோரியா (Victoria) மகாராணியே** இவ்வௌஷதத்தை உபயோகித்து உபத்திரவமில்லாமல் பிரசவித்தார்களென்று பிரசித்தியானவுடன் ஆங்கிலேய ஸ்திரீகளெல்லோரும் அப்பிரயோகத்தையே அனுஷ்டித்து வருகிறார்கள்.

குழந்தை பிறந்தபின் சிலநாட்களாக மிகுந்திருக்கும் நஞ்சு பாசிபோல் உதிரத்தோடு சேர்ந்து வெளியேறும், இந்நாட்களில் அனுவசியமாய் உதிரப்பிரவாகம் உண்டாகாதபடிக்குக் கருப்பை சுருங்கவேண்டியது அவசியம். ஆகையால் கருப்பைக்குக் கிளர்ச்சி உண்டாகும்படி குழந்தையைச் சீக்கிரம் பால் குடிக்கும்படி செய்யவேண்டும். ஆனால் இரண்டு மூன்று நாள் வரைக்கும் சரியான பால் ஸ்தனங்களிலுண்டாகாதபடியால் குழந்தைக்கதனால் பிரயோஜனமிராது. ஆனால் பிறந்து 24-மணி நேரம் வரைக்கும் குழந்தைக்கு யாதொரு ஆகாரமும் தேவையில்லை. அப்படித் தேவையிருக்குமாயின் தேன் கொடுப்பது வழக்கம். பிரசவித்துப் பத்து அல்லது பதினான்கு நாள் வரைக்கும் ஸ்திரீயானவள் அசையாமல் தன் படுக்கையிலிருந்து அந்தந்த அவயவங்கள் தத்தம் ஸ்தானங்களில் சேர்வதற்கு இடங்கொடுக்க வேண்டும். அதற்குள்ளாக உதிரப்பெருக்கும் நின்றுவிடும். அதன் பின்பு குறைந்தது நான்கு வாரத்திற்குள் ஸ்திரீ கடினமான வேலைகளை செய்ய ஆரம்பிப்பதனாலும், மெத்தைப்படிகளில் ஏறி இறங்குவதனாலும் மேற்படி உறுப்புகளில்

சில. வெளியேவந்துவிடும். பிற்பாடு அவைகளைத் தத்தம் ஸ்தானங்களில் நிலைநிறுத்துவது கடினம். ஆகையால் பேறுகாலமான ஸ்திரீ சிறிதுகாலத்திற்கு அதிகமாய் நடமாடாமல் ஜாக்கிறதையாய் இருக்க வேண்டும்.

---

## மனோவியாபக சக்தி.

கடலாடை சூழ்ந்த காசினியின்கண் உற்பவித்துலவும் சகலஜீவ சராசரப் பொருட்களிடத்தும், மேலானதாய் மனிதப்பிறவி ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. "அரிதரிது மானிடராதலரிது" எனும்முது மொழியை எவர்தாமுணரார். இத்தகைய மனுக்குலத்திற்கு அரியசக்தியாய் விளங்கி அனவரதமும் அற்புதம் நிறைந்த தற்பாவஸ்துவாய் விளங்குவது மனம். அம்மனத்தின் மாண்பை எத்தகையது எனவரையறுப்பது கூடாமை. வேதாந்த சித்தாந்த இதிகாசாதி புராண நூற்களிலும் இம்மனத்தின் மாண்பும் குரங்குக் கொப்பான விபரீத சேஷ்டைகளும், நன்கு விளக்கப்பட்டுள்ளன. எந்த வேதாந்த சாஸ்திரத்தைக் கையிலெடுப்பினும் "மனதை யடக்கு" எனக்குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். மனதை யடக்கியாளுந்தன்மைதான் மிக்கது. இம்மனமானது வாய்வின்கூறு, காற்றானது எங்ஙனம் ஓரிடத்தில் நிலையின்றிசலித்துக் கொண்டே இருக்கின்றதோ, அங்ஙனமே மனமும் ஊரெல்லாம், உலகெலாம் சுற்றிச்சுழன்று ஓரிடமும் தங்கித்தரியாமல் அலைபாய்ந்து வருகிறது. இம்மனத்தை சமுத்திரத்து அலைகளுக்கும் ஒப்பிடலாம். எங்ஙனமெனில், கடலில் ஆண் அலையென்றும், பெண் அலையென்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இதைச் சாதாரண ஜனங்களும் கூறுவர். அதில் ஒன்று படிப்படியாய் கரையையடுத்து வெண் நுரைகளுடன் வந்துதாக்கும். மற்றொன்று படிப்படியாய் பழயபடியும் போய்ச்சேரும் அத்தகையதாகவே மனமும் பலபல விஷயங்களைத் தன்னுள் ஆவாஹனப்படுத்தி மூளையில் பதனமாக்கிக் கொண்டுவரும். நாம் நினையாத விதமாய் திடீரென்று பழயபடியும் எதிரில் நடப்பதுபோல் அற்புதக் காட்சிகளும், ஆச்சரியக் கனவுகளும், ஞாபகத்துக்குக் கொண்டுவர நாமெவ்வளவோ முயன்றும் முடியாது போன நினைவுகளும், பளிச்சென்று மேகத்தில் தோன்றி மறையும் மின்னலொளியைப்போல நமக்குத் தெரியவருகின்றதைக் கண்கூடாகப்பார்த்து வருகின்றோம். இம்மனத்தின் மாட்சிமையைக் குறித்தே "மனம் போலிருக்கும் மங்கிலியம்" "மனமுண்டானால் வழியுண்டு" என்வும், மனதைப் புறஞ்செல்ல விடலாகாதென்பதைக்கருதி "மனம்போன போக்கெல்லாம் போக

வேண்டாம்'' என்றுங் கூறப்பட்டிருக்கின்றது. இதற்குத்தான் மனோ வியாபக சக்தி எனவும் கூறுவர். இம்மனத்தின் சக்திப்பிரயோகத்தினால், பலசாலியான ஒரு மனிதனைத் துர்ப்பலமுள்ளவனாகவும், துர்ப்பலமுளானைப் பலிஷ்டனாகவும், ஆழ்ந்த துக்கத்திலிருப்பவனை மிக்க களிப்புடையவனாகவும், களிப்புடையானை கவலையாளனாகவும், வியாதிகளையகற்றவும், கெட்ட நடவடிக்கைகளைப் பற்றறத் தொலைவிக்கவும், இன்னும் எண்ணிறந்த வகையான நன்மையான காரியங்களை நடத்தவுங் கூடும். இதைக் கண்டு தான் பேதை ஜனங்கள் குறி கேட்பதும், உடுக்கடித்துப் பிழைக்கும் அம்மன் கொண்டாடிகள், ஆத்தாள் கொண்டாடிகளிடம் துட்டுத்துக்காணிகளைக் கொடுக்கிறதும், குடுகுடுப்பாண்டியிடம் அரை வஸ்திரங்களை அவிழ்த்துக் கொடுக்கிறதும், அன்னவர்கள் செய்யும் அட்டகாசங்களில் மதிமயங்கி மனமருள்வதும், சகஜமாயிருந்து வருகின்றது. அவர்களுக்கு அப்பியாசமாகியிருக்கும் கொஞ்சமான மனோபாவத்தினாலேயே இத்தகைய ஆர்ப்பாட்டம் புரிவார்களானால் பூரண சக்தியடைந்தவர்களுடைய பெருமையை எங்ஙனம் கூறற்பாலது. இதனால் உலகத்தினிடத்து மானுடயாக்கையைப் போர்த்திருக்கும் ஜன சமுகத்தில் செல்வாக்கு, மரியாதை, மனக்கிளர்ச்சி, தேக தத்துவ பலங்கள், குடும்பந்தாங்கல் முதலிய அரிய காரியங்களெல்லாவற்றிற்குமே சிறக்கச் செய்வது மனதையடக்கியாளுந்தன்மையேயாம். இம்மனோ தத்துவபலன் எத்தன்மையதென்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

பட்டணத்து சிப்பாய் ஒருவன் சண்டை நடந்துவருங்காலத்தில் தண்டு இறங்கியிருக்கும் கூடாரத்தை சுற்றிலும் பாராக்கொடுத்துக்கொண்டிருந்தான். மற்றும் அநேக சிப்பாய்களும் சுற்றிலும் பாராக்கொடுத்துக்கொடுத்துக் கொண்டிருந்தனர். மணி 12-அடித்தது. நடுநிசி, நல்லிருள், அப்போது வசந்த காலமானதால் குன்றிடைப்பிறந்த தென்றல் குளிர்ந்து வீசிக்கொண்டிருந்தது. குளிர்ந்து இனிமையாய் வீசும் காற்றின் சுகத்தால் தன்னை மறந்து கையில் துப்பாக்கியுடன் நின்றநிலையிலேயே தூங்கி விட்டான். கைதனிலிருந்த துப்பாக்கியும் மெல்லெனக்கை நழுவிக் கீழ்விழுந்தது. பக்கத்தில் பெரிய பீரங்கி யொன்றும் கிடந்தது. பாராக்கொடுக்கும்போது சண்டை நடக்கும் ஸ்தலங்களில் தூங்கவும் கூடாது. கையில் துப்பாக்கியின்றியிருத்தலுமாகாது; இங்ஙனமாகப் பாராவைப் பார்வையிடுவதற்காக மேலதிகாரி குதிரை மீதேறி வெகுவேகமாய் சப்தத்துடன்வரவே சிப்பாய் விழித்துக்கொண்டு தூக்க

மயக்கத்தினாலும், திடீரென்று விழித்த கலக்கத்தாலும், துப்பாக்கி கையிலில்லை யென்பதுணர்ந்து பக்கத்தில் கிடந்த நாலாள் சேர்ந்து தூக்கும் வலிமையுள்ள பீரங்கியைத் தூக்கிக் கொண்டு நின்றான். இதைப் பார்த்து கர்னல் துரை ஆச்சரியமடைந்து ஒன்றும் பேசாமல் சென்றான். அவன் அந்தண்டை போனதே இவன் தன் கையிலுள்ளது துப்பாக்கியல்லவென்றும் பீரங்கி யென்றுமுணர்ந்து நின்ற விடத்திலேயே போட்டுவிட்டான். அப்புறம் அசைக்கக் கூட அவனால் இயலவில்லை. நாலாள் தூக்கும் பீரங்கியை இவன் ஒருவன் எப்படித் தூக்கினான்? மனதின் திகிலன்றோ? இங்ஙனமேதான் முடியக்கூடாத காரியங்களும், அற்புதமான செயல்களும், மனத்தின் தன்மையால் சித்தித்திருக்கின்றன. மேலும் சமீப காலத்தில் என் ஊருக்கருகாமையில் ஒரு விநோத சம்பவம் நிகழ்ந்தது. அதுவும் மனத்தின் தன்மையை செவ்வனே விளக்கும். அதை இச்சமயம் நேயர்களறியாமலிருக்கக்கூடாது; கூறாமலிருக்கவும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. அதாவது; எனது ஊருக்கருகாமையிலுள்ள ஓர் கிராமத்தில் தோட்டக்காரன் ஒருவன் வழக்கம் போல் ஒருநாள் தனது தோட்டத்திற்கு மத்தியானம் சென்றான். சோளப்பயிர்கள் நன்றாய் செழித்து வளர்ந்து கரையையடுத்த இருபுறமும் பச்சைப்பசேரென்று ஒரு ஆள் மட்டமாய் உயர்ந்திருந்தன. அவ்விடம் வெகு நாளாய் ஓர் புற்றுமுண்டு. அதன் வழியாய்த்தான் தோட்டத்தைச் சுற்றிச்செல்லவேண்டும். அந்தப்புற்றைச்சுற்றிலும் சோளப்பயிர்கள் யதேஷ்டமாய்த் தலை நிமிர்ந்திருந்தன. இவ்வழியாய் மேற்படி குடியானவன் சென்றான், அச்சமயம் புற்றின் மீது தலைவைத்துப் படுத்திருந்த பாம்பும் இவனைத் தீண்டிற்று. இவன் போகும் அவசரத்தில் அதைக் கவனியாமல் சோளத்தட்டை காலில் உராய்ந்து இருக்கிறதென்று காலையுதறிவிட்டுச் சென்றான். அதைப்பற்றி அவனது நினைவில் தாக்கவுமில்லை. இங்ஙனமாக மூன்று நாட்கள் கழிந்தன. நாலாநாள் வழக்கப்பிரகாரம் அவ்வழி சென்ற காலையில் பழிகாரப் பாம்பு கண்ணெதிரில் விரைந்து செல்வதையும், புற்றுக்குள் நுழைவதையும் கண்டான். ஆஹா! என்ன ஆச்சரியம்!! அன்று நாம் செல்கையில் சோளத்தட்டை உராய்ந்தது என்று நினைத்தோம். இரத்தம் கூட வந்தன்றோ? இந்தப் பாழும் பாம்பன்றோ கடித்ததென்று மனதில் உதித்தது. மயக்க மேறியது. விழுந்தான் கீழே வாயில் இரத்தம் கக்கியது. ஆள் பைசலானான். அந்தோ!

*மனத்தின் கூறு இங்ஙனமிருப்பதால் இம்மனதை எத்தகையதாய் அடக்கியாளவேண்டுமென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளல் ஆவசியகமாம். இதன் மகிமையைப்பற்றி 'சைகாலஜி' (Sycolagy) முதலிய ஆங்கில நூல்களை வாசிப்பின் நன்கறியலாம். ஆனால் நம் தமிழ் நாட்டினரில் ஆங்கிலேய பாஷையறியாதார் தெரிந்துகொள்ளல் கடினமாகலான் சமயம் நேர்ந்துழிமொழிபெயர்த்தெழுதுவாம். நிற்க, மேற்குறிப்பிட்ட மனத்தின் தன்மை இங்ஙனமிருப்பதால் மனத்தையடக்கி தேகவன்மையை வியர்த்தமாக்காமல் இந்திரிய நிக்ரகம்செய்து உடம்பைப்பேணும் உத்தமர்களை "பரமபிதாவுக்கு" சமானமாக மதிக்கவேண்டும். அன்னவர்வள் தான் அற்புதக்காரியங்களைச் செய்தற்குரியவர், மஹாத்மாக்கள் என்று அவர்களைப் பணிதல் தகும். சகல போகங்களையும் வெறுத்து ஆசையெனும் பசாசையோட்டி, காசாசை யெனும் பைசாசவலையிற் சிக்காமல், ஆணுவமென்பதை யறுத்து, இந்திரிய நிக்ரகம் செய்து மனத்தை ஒரு வழிப்படுத்தி, வைராக்கிய "தீபமாய், எனக்

---

* சில மனதைப்பற்றிய வியாதியஸ்தர்களுக்கு அதிக நல்ல அவுஷதங்கொடாமலே வியாதிக்காரர்களை நல்ல மாதிரியாகவும், பக்ஷமாகவும், பயமுறுத்தியும் நடத்தி வருவதால் அவ்வியாதி முழுவதும் சவுக்கியப் பட்டுப்போகுமென, சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாதிரியாகவே சிலருக்கு பயம் முதலியவைகளினுல் அவ்வியாதி சுவஸ்தப்பட்டிருக்கிறது.

அதற்கு திருஷ்டாந்தம்:—ஸ்ரீமான், டாக்டர் வரதப்ப நாயுடுகாரு அவர்கள் இரண்டு வியாதியஸ்தர்களை சுவஸ்தப்படுத்தினுர். அவர் செய்த சமயோஜித சிகிச்சையை நினைக்கும்போதெல்லாம் எனக்குஅதிக ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் தக்க இடத்தில் இதை உதாரணமாகக்கொண்டுவராமலிருக்கக் கூடவில்லை. அவையாவன, சென்னையில் ஓர் சிறுவனுக்கு, தினமொன்றிற்கு எழெட்டு முறை வலிப்பு வந்து கொண்டிருந்தது. அதில் கைகால்களை இழுத்தல், மூர்ச்சையாய் விடுதல் முதலிய பலரோகங்களுண்டாயிருந்தன. பெற்றோர் அதற்காக செய்யாத சிகிச்சையும், கொடுக்காத அவுடதங்களுங்கிடையா. அச்சிறுவன் நாயுடு அவர்களிடம் கொண்டுவரப்பட்டபோது அதைப்பற்றி நாலைந்து தினம் யோஜித்து தீர்மானித்ததாவது, மருந்தைக் கொடுப்பதைவிட தந்திர சிகிச்சை செய்யவெண்ணி, அச்சிறுவனுக் கெதிரிலேயே மூட்டம்போட்டு இரும்பு சலாகைகளைக் காயவைத்துவிட்டுப் பேசிக்கொண்டேயிருந்தார். இவ்விதம் 2-3மணிநேரம் இருந்தும் அவ்வலிப்புவாவில்லை. அதன் பேரில் இதுதான் தகுந்த சிகிச்சையென த்தீர்மானித்து தினம் அங்கே

குள் நீ உனக்குள் நான் "எனும்" I am in my father, And my father is in me "அஹம்பிரமாஸ்மி" "தத்துவமஸி" "ப்ரக்ஞானம், பிரமம்" என்று சகலவிதமாயறிந்து "I and my father are one" "எந்தையும் நானுமொன்று, என்னில் எந்தையும் எந்தையில் யானுமே யுளோம்" என்ற சகல மத சித்தாந்தக் கொள்கைப்படி கடவுளின் கடாக்ஷ வீக்ஷணியத்திற்குப் பாத்திரராய் கடவுளோடு இரண்டறக்கலந்து பேரின்ப முத்திநிலையை ரிஷிகள், ஞானிகள், கிறிஸ்து, ஸெண்ட்பால் முதலிய மஹான்கள் உரைத்தமைபோல் வழிபட்டுய்யும் பெரியோரைப் பணிவோரே பெறும் பேறுற்றவராவர். அன்னவர்களே மனோவியாபக சக்தியில் மிஞ்சிய தவயோகிகளென்னப்பெருமை பெறும் பேருற்றவர். இனி இம்மனதை எப்படி அடக்கியாளுந்தன்மையை யடையலாமென்பதைப்பற்றி அடுத்த முறை தொடுப்போம்.

K. S. வைத்தினாதய்யர்.

---

இரண்டுமணிநேரம் இருந்து வந்தார். அவர் இருக்கிறவரையில் அந்நோய் தலைகாட்டுவதில்லை; அவர் போனபின் வருவதுண்டு. அதன்மேல்அந்த ப்பையனை சிலநாள் தன்னுடன்கூடவே வைத்திருந்து முழுவதும் சுவஸ்தப்பட்டபின்பு பெற்றோரிடத்தில் ஒப்புவித்தார். அச்சிறுவன் இன்னும் சுகஸ்திதியிலிருக்கிறான். அவ்விதமே இன்னொரு அம்மாளுக்கு வாய்திறக்கவும், போஜனம் பண்ணவும் ஹேதுவில்லாது மனப்பேய்ப் பிடித்திருந்தது. இதுவும் ஷெயார் தந்திர சிகிச்சையினாலேயே நிவர்த்தியாயிற்று.

இன்னும் கொக்கோக சாஸ்திரியாரும் சொல்லுகிறதாவது, பெண்ணிற்குமுன் ஆணிற்கு விந்து ஸ்கலிதம் உண்டானால், அதைத்தடுப்பதற்காக சம்போக காலங்களில் தன் மனதை வேறு விஷயத்தில் செலுத்தி, போகத்தில் இல்லாததுபோல் பாவித்திரிப்பதினால் ஸ்திரீக்கு முந்தி புருஷனுக்கு ஸ்கலிதம் ஆகாதெனச் சொல்லியிருக்கிறார். இன்னும் ஒரு வியாதியஸ்தனை நோக்கி உனக்கு ரஸ மருந்துகள் கொடுக்கிறேன். உன் வாய் ரணமாய் விடுமெனச் சொல்லி, சாதாரணமாகிய, வெண்ணெய், ரொட்டி முதலாகிய உணவுகளில் யாதொரு மருந்தையும் கலக்காது அரைத்துருட்டிச் சாப்பிடக்கொடுக்க வாய் ரணமாய்விடும்.

மேற்காட்டிய திருஷ்டாந்தங்களினால் மனிதருக்குண்டாகும் சில விஷயங்களினால் சுபாவமாயுண்டாயிருப்பது இல்லாமற் போய்விடுவதும், சிலவேளை அவர்கள் சக்திக்கு அதிகமாகச் செய்யக்கூடிய வல்லமை உண்டாகிறதெனவுந் தெரிய வருகிறது. (பத்திராதிபர்.)

ஆகஸ்டு மாத சஞ்சிகையின் 66-வது பக்கத்துடர்ச்சி.

## மனிதர்க்குரியவுணவு.

மாம்ஸத்தையோவெனில் எத்தனையோ முறையாய்ப் பக்குவப்படுத்தியே உண்ணவேண்டும். ஊனையுண்பவர்கள் அதிகமாகப் பசி தாங்க மாட்டார்கள், தானியங்களை யுண்பவர்களுக்கு உபவாசஞ் செய்வதிலும் வருத்தமிராது. ஊனுண்பவர்களின் பல்லும் வாயும் எப்பொழுதுமே துர்க்கந்தமாக நாறிக்கொண்டிருக்கும். அவர்களுடைய மல மூத்திரங்களும் கணக்கில்லாதபடி துர்க்கந்தமாக நாறும். வைத்தியர்கள் எந்த நோய்க்கும் புலாலுண்பதை நிறுத்திவிடவேண்டுமென்று பத்தியம் விதிப்பார்கள். புலாலுண்பவர்கள் அதிகமான சீதோஷ்ணத்தைத் தாங்கமாட்டார்கள். காய், கறி, கிழங்குகளைமட்டுமே யுண்பவர்களின் தேககட்டு உறுதியாயிருக்கும்; அவர்கள் தேகம் அதிகமாகவும் பெருக்காது; இளைத்தும் போகாது, புலன்களின் நுகர்ச்சியுங்கெடாதிருக்கும், கண்ணுக்கழகாயும் தேகவலிமை யுடையவர்களாயு மிருப்பார்கள். இதனாலும் மூலவர்க்க உணவே எற்ற உணவென்றறியலாம். ரஸாயனசாஸ்திர முறைப்படியும் சற்றே பார்ப்போம். புலாலுணவு எளிதில் ஜீரணமாகுமென்றும், தேகத்துக்கு நல்ல புஷ்டியைத் தருமென்றும் சிலர் சொல்லுகிறார்களே யன்றி இது உண்மைதானென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி இன்னும் ரூபித்துக்காட்டவில்லை. மூலவர்க்கமே மனிதர்க்குச் சிறந்த உணவென்றும், அவற்றுள் சில மாம்ஸத்திலும் பல மடங்கு பலமுடையனவென்றும், அவை எளிதில் ஜீரணமாகின்றனவென்றுங் கண்டிருக்கிறார்கள்.

அரிசி, பயறு வர்க்கங்கள் ஆகிய இவற்றின் சாரமானது மாம்ஸத்தின் ஸத்திலும் அதிகமானதுமன்றித் தேகத்திற்கும் நன்றாய்ப் பொருந்தியதென்று கண்டிருக்கிறார்கள். உருளைக்கிழங்கின் ஸத்து இறைச்சியின் ஸ்த்துக்கு குறைந்ததேயன்று. புலாலையுண்பதினால் தேகத்திற்கு அவசியமிருக்கவேண்டிய உஷ்ணங்குறையாதென்று சிலர்சொல்லினும், காய் கறிகளிலிருக்கிற கரியமிலவாயு தேகத்திற்கு உஷ்ணத்தை அதனிலும் அதிகமாகத்தரும். இது விஷயத்தில் வைத்தியர்கள் சொல்லுவதைச் சற்றே நன்றாக ஆலோசித்துப் பார்ப்பது அவசியமாகும். பேதி முதலிய விஷஜ்வரமும், கொள்ளை நோய்களும், பரவும்போது புலாலை யுண்பது கூடாவே கூடாதென்பது வைத்தியரின் கொள்கையாகும். அக்காலத்தில் கந்த மூலங்களையுண்பவர்களுக்கு அந்நோய்கள் அதிகமாக உண்டாவதில்லை. காயம், நசிபு நெருப்புப்பட்டபுண் இவை எளிதில் ஆறவேண்டுமானால் ஊனையுண்ணாமலிருத்தல் வேண்டும்.

இவ்வுலக சரித்திரத்தின்படி பார்த்தால் சாக பக்ஷணஞ்செய்கிறவர்களெல்லோரும் பலவான்களாகவும், நீடித்த ஆயுளுடையவர்களாகவும், நோயற்ற வாழ்வுடையவர்களாகவும், சிறந்த புத்திமான்களாகவுமிருக்கிறார்களென்பதைக் காணலாம். ஊனைப் பெருமிதமாக உண்ண உண்ண மனிதர்களின் அந்தமும், அழகுங்குன்றிப்போம், ஆங்கிலேயர், ஜர்மனியர், பிராஞ்சுக்காரர், அமெரிக்கர் முதலியவர்கள் மூலவர்க்க உணவையும் மாம்ஸத்தையுஞ் சேர்த்துண்டு நன்றாக அழகு வாய்ந்து சுகமாயிருக்கிறார்களென்றாலும, அவர்களிலும் ஊனை விலக்கிக் கொல்லாவிரதம் பூண்டு கந்த மூலங்களை மட்டுமே உண்பவர்களே எல்லாச்சிறப்பு மமைந்தவர்களாம். இதனாலும் புலாலுண்ணாமையின் பெருமையை நன்றாயறிந்து கொள்ளலாம்.

ஊனுண்டல் கூடுமென்பதற்கு நீதி நூல் தான் இடங்கொடுக்கிறதோவென்று பார்ப்பின் அதுவும் அவர்களுக்கு முற்றுமே விரோதமாகும். ஊனை உண்பதனால் அது தேகத்தில் ஓர்வித உணர்ச்சியையுண்டாக்கிச் சிற்றின்பப் பிரியர்களாக்கும். அப்படிக்கின்றி ஸாத்துவிக ஆகாரமான கோதுமை, அரிசி, பயறு முதலிய தானியவர்க்கங்களை மட்டும் உண்டுகொண்டு வந்தால் அது தேகத்திற்கு அநுகூலமாய், மனம்போன போக்கின்படியெல்லாம் மனதைச் செல்லவிடாது அதை ஒரு நிலையில் நிறுத்தி நம்மை நல்வழியிற் செலுத்தும். தன்னூன் பெருக்குதற்கு பிறிதூன் உண்பவனுக்கு அருளுடைமை எப்படி உண்டாகுமோ தெரியவில்லை. ஒருயிரையுங் கொல்லாமலும், புலாலை உண்ணாமலிருப்பவர்களை எல்லா உயிருமே கைகூப்பித் தொழும்; நாம் மற்ற உயிர்களுக்குத் தீங்கு நினையாமல் அவைகள் நம்மைக் கண்டால் அஞ்சாதபடியுஞ் செய்பவனே கடவுளுடைய கருணைக்குப் பாத்திரனாவான். அஹிம்ஸை தர்மங்களுக்கெல்லாம் உத்தமமானது. இது எம்மதத்தவர்களுக்கும் சம்மதமானது. இந்தப் பூமியில் அபரிமிதமாய்க் காய்களும், கனிகளும், கிழங்குகளும், பலவகையான தானியவகைகளுமிருக்கையில் அநியாயமாய் உயிர் வதைசெய்வது நன்றாகாது.

நாம் அனுபவசித்தமாய்ப் பார்ப்பின் ஊனுண்பதை விலக்கி, மூலப்பொருள்களுள் நமக்குரிய நல்ல ஆகாரங்களைமட்டுமே தேர்ந்துண்பது, இகத்துக்கும் பரத்துக்கும் நன்றாகும். ஒருவன் தனக்குரிய உணவாகிய தானியவகைகளை விட்டு ஊனையுண்ணின் அதனால் பலவகையான நோய்களுண்டாவது திண்ணம். குரங்கு, மான் முதலியவற்றிற்கு ஊனையுண்ணப் பழகுவதனால் அவற்றிற்கு நாளடைவில் நோயுண்டாகிக் கெட்டுப்போம். இக்காலத்தில் அங்கங்கேயுள்ள விவேகிகள் ஊனையுண்

பது கூடாதென்று அதை மெள்ள மெள்ள விலக்கி வருகிறார்கள். ஊனை ஒருபொழுதுமேயுண்ணுதிருக்கும் ஜப்பான் தேசத்தாரைப்போன்ற சூரர்களை எங்குமே காண்பதரிதன்றோ? ஆதலால் புலாலுண்ணுமையே பெருமையுடைத்தென்றுகொண்டு ஸர்வஜீவதயாபரர்களாயிருத்தலே உத்தமமான தருமமென்று கொள்ளல்வேண்டும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லாவுயிருந் தொழும்."

## சங்கீதப் பயிற்சி.

இளைப்பாற்றும் விநோதங்களிற் சங்கீதம் மிகவும் மனதிற்கடுத்தது. இம்மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் ஆதாரமாயிருப்பதும் நன்னடைக்குரிய உணர்ச்சியைப் பயிர்ச்சி செய்யத்தக்கதும், இவ்வுலகத்தை மறந்து மறு உலகத்தை எண்ணச்செய்வதும், நம்முடைய நினைவுகளை மனத்தை விட்டுப் பறக்கச்செய்து விண்ணுலகவாசிகளாகிய அழிவின்மையோர்களுடன் கைபிடித்து உலாவச்செய்வதும், இன்னும் பிரியம், அன்பு, நேசம் இவற்றினையெல்லாம் அதிகரிக்கச் செய்யும் கருவியும் இச்சங்கீதமேயாம்.

ஆங்கிலத்தில் டிரைடன் (Dryden) என்னுங் கவிஞரியற்றிய அலெக்ஸாண்டர்ஸ் வ்வீஸ்ட் (Alexandra's feast) என்னும் பாட்டில் இச்சங்கீதத்தின் சக்தி நன்றாய் விளங்கும். இப்பாட்டில் எந்தெந்த ரசங்கள் பிரதானமோ அந்தந்த ரசங்களுக்குத் தகுந்தபடி அலெக்ஸாண்டர் மனது வேறுபடும். வீரரச சமயத்தில் தான் யுத்தம் செய்வதாக பாவனை செய்வான். சோகரச சமயத்திற் கண்ணீர் சொரிவான். சிருங்காரரச சமயத்தில் தன் மனைவி ஸ்தனங்களில் விழுவான். இப்படி மனதை உருகச்செய்யும் சங்கீதம் ஆதிகாலமுதல் ஜனங்களுக்குப்பிரியகரமாகவே இருந்து வருகிறது. ஜுபல் (Jubal) என்பவன் சங்கீதத்தை கோஷிக்கச் செய்தபொழுது கேட்டிருந்த ஜனங்கள் தெய்வலோகத்து சப்தமோவென்று நினைத்து அச்சப்தத்தை ஆராதிக்கத் தொடங்கினார்களென்றும், ஸிஸிலியா (Cecilia) என்பவள் தன் வாத்தியத்தை வாசிக்கத் தொடங்கினபோது கேட்டிருந்த தேவதூதனொருவன் மண்ணுலகத்தை விண்ணுலகமென்றெண்ணி இறங்கினனென்றும், ஆர்பியஸ் (Orpheus) என்பவன் தன் வாத்தியத்தை முழக்கினபொழுது மரபட்டைகளெல்லாம் அச்சுககரமான சப்தத்தைப் பின்பற்றி

ப்போயினவென்று, ஐரோப்பிய நாடுகளிலும், அதிக கரேமனதுள்ள விசுவாமித்திர மஹாிஷியின் நேத்திரத்தைத் திறக்கச்செய்ததும் மேனகையின் மேன்மையான இவ்வானந்தகரமான கானமே என்றும், கைலாசகிரியைப் பெயர்த்தபோது சிவபெருமான் பாதத்தால் நசுக்குண்டு அவஸ்தைப்பட்ட, அரக்கனான இராவணனும் விடுதியடைந்ததற்குக் காரணமும் இக்கானந்தானென்றும் நம் தேசத்தில் கூறுவர்.

கொஞ்சகாலமாக இச்சங்கீதம் துர்விஷயங்களிற் பிரயோகிக்கப்பட்டுச் சங்கீதத்தின்பேரில் ஒருவிதமான அருயை ஜனங்களுக்கு ஏற்பட்டு விட்டது. சங்கீத பயிற்சியும் துர்நடக்கையும் அநேகமாய்த் தங்கை தமக்கை போலக்கூடி வாழ்கின்றன. நன்னடக்கை, நற்குணம், நன்றியறிவு, பயபக்தி இத்தன்மையான குணங்களைப் போதிக்கும் சத்கீர்த்தனைகளையே ராகதாளத்துடன் கற்பிக்க வேண்டியதேயொழிய "மிஞ்சி நட நடக்கும்" "எண்டி குட்டி தங்கமே" "ஆசைகொண்டேன் மன்னவா" என்பன முதலான ஆபாசபாடல்களுக்கு இடங்கொடுக்கக் கூடாதென்பது எமது துணிபு.

சங்கீதத்திற்கு இப்பொழுது இருக்கிற மஹத்துவக் குறைவைப் போக்கி, அதைக்கனப்படுத்தி சற்பாத்திர விஷயங்களிற் பிரயோகித்து மேன்மேலும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டியது. நம் தேசத்தில், செய்யவேண்டிய சீர் திருத்தங்களிலொன்று. (பிரஜானுகூலன்.)

---

## VACCINATION.

### அம்மை வைத்தல்.

ஜூலை மாத "பிழைக்கும் வழி" யில் இந்த விஷயமாக வெளிவந்திருக்கும் வியாஸமாவது:—சென்னப்பட்டணம் முதலிய பெரியபட்டணங்களில் குழந்தை பிறந்த ஆறு மாஸத்துக்குள் அம்மை குத்திவிட வேணுமென்றும், அப்படிக் குத்தாவிட்டால் பெற்றோர்கள் தண்டனைக்குள்ளாவார்களென்றும், முனிஸிபாலிட்டியார் கட்டாயப்படுத்துவது பட்டண வாஸிகள் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். கிராமாந்தரங்களிலும் கிராம முனிசீபைக்கொண்டு சிபார்சு செய்யச்சொல்லி அம்மை போட்டாதவர்களுக்கு அம்மை வைக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அம்மை குத்துவது என்பது என்ன? அதை யார் கண்டுபிடித்தது? அதனால் என்ன பிரயோஜனம்? என்னும் இந்த விஷயங்களைப்பற்றி ஜூன் மாஸத்து "நல்லாசிரியனில்" வி. கே. நாராயணஸாமி அய்யர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

18-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் க்ளஸ்டர் ஷயர் மாகாணத்தில் பசுக்களுக்கு வைசூரி கண்டிருந்த சமயத்தில், பசுவின் மடியில் எழும்பியிருந்த முத்துகள் பால் கரக்கும்பொழுது உடைந்து பால் கரப்பவர்களுடைய விரல்களில் பட்டு முத்துகள் எழும்பி வந்ததினால், அவர்கள் தங்களுக்கு வைசூரியாகிய பெரிய அம்மை வருகிறதில்லை என்று உறுதியாகச் சொல்லி வந்தார்கள். அந்தக் காலத்தில் எட்வர்ட் ஜென்னர் என்று ஒரு வைத்திய பண்டிதர் இருந்தார். பால் கறப்பவர்கள் சொல்லிய விஷயம் ஷை பண்டிதர் காதில் படவே, பெரியம்மை போட்டியவர்களின் மேல் வைசூரி நீரைப்பிரயோகம் செய்து பரீட்சித்து, அவர்களுக்கு வைசூரி நோய் வாராதிருக்கக்கண்டார். உடனே, அவர் பசுவின் வைசூரி நீரை மனிதர்மேல் செலுத்தி, எழும்பும் முத்துக்களின் நீரை மற்ற மனிதர்கள் மேல் செலுத்துவதனால் முத்துகள் உண்டாகுமென்றும், அப்படி உண்டான பின் அவர்களுக்கு வைசூரி வாராதென்றும் வெளிப்படுத்தினார். இந்த வைசூரி நீர் பசுவினது இரத்தத்தில் வேறுபட்டு வைசூரியை முறிக்கும் சக்தியை உடையதாகிறது.

காலக் கிரமத்தில், டாக்டர் ஜென்னர் பசு வைசூரிப்பிரயோக விஷயமாய் அனுஷ்டித்த முறை பல மாறுபாடுகளை அடைந்தது. இப்போது பசு வைசூரி நீரைக் கன்றுக்குட்டிகளின் மடிகளின்மேல் பிரயோகித்து, மடிகளிலிருந்து உண்டாகும் வைசூரி நீருடன் க்ளிஸரைன் லானோலைன் முதலிய சரக்குகளைச் சேர்த்து, அது சீக்கிரத்தில் வீர்யமற்றுப் போகாமலிருக்கும்படி சிறிய ஈயக்குழாய்களில் அடைத்து, மாகாணங்களின்பல பாகங்களுக்கும் அனுப்பி அம்மை குத்துவதை ஜனங்களுள் பரவச் செய்கிறார்கள்.

இதுவரையில் ஒருதடவை அம்மை வைத்த பிறகு எழு வருஷம் வரையில் அதன் வீர்யம் தேகத்தில் இருக்குமென்று எண்ணிவந்தார்கள். இப்போது சில ஸமயங்களில் அம்மை வைத்தும் இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு பெரியம்மை வார்க்கிறதென்று கண்டு, இரண்டாம் தடவையும் அம்மை வைப்பது நலமென்று சொல்லுகிறார்கள்.

பசு வைசூரிப்பிரயோகமான பிறகு ஒருவனுக்குப் பெரியம்மை வார்த்தாலும் அது வேகமற்று மிகவும் அற்பமாயிருக்கும். சில மணிகள் கண்டாலும் பிராணனுக்கு அபாயம் நேரிடுவது மிகவும் அபூர்வம்.

பெரியம்மை என்னும் இந்தக்கொடிய ஒட்டுவாரட்டி வியாதியை நிவர்த்தி செய்ய மேற்கூறியபடி தகுதியான சாதகங்களிருந்தும், ஜன

ங்கள் அறிவின்மையால் இவ்வியாதியை * மாரியாத்தாள் என்று நம்பி வேண்டிய பூஜை, பலி முதலிய காரியங்களில் அதிக பணம் செலவு செய்து, தங்கள் கோரிக்கை நிறைவேருமல் அநேகர் இறந்துபோகிருர்கள்.

இப்போது ஐரோப்பா தேசங்களில் கட்டாயப்படுத்தி துரைத்தனத்தார் அம்மை குத்துவதால் குடிகளுக்கு அம்மையால் நேரிடும் மரணம் வருஷந்தோறும் குறைந்து வருகிறது. நமது தேசத்தார் ஐரோப்பியர்களினின்றும் நடை, உடை, பாவனை, ஆகாரம், மதம் முதலியவற்றில் வேறுபட்டிருப்பதால் இங்கே கிராமாந்தரங்களில் பலாத்காரம் செய்யாமல் பெரிய பட்டணங்களில் மட்டும் கட்டாயப்படுத்தி வருகிருர்கள்.

குழந்தைகளுக்கு, பிறந்த ஆரும்வாரம் முதல் ஆறு மாதத்திற்குள்ளாக பல்மாந்தம் காணுமுன், அம்மைவைப்பது உத்தமம். ஆனல் சொரிசிரங்கு முதலியபிணிகள் கொண்டிருக்குங்காலத்தில் வைக்கக்கூடாது.

---

## A NOTE ON HAIRY CATERXILLARS.
## கம்பளிப் பூச்சியைப் பற்றிய குறிப்பு.

---

சென்னை விவசாய சங்கத்தார் கம்பளிப்பூச்சியைப்பற்றி வெளிப்படுத்தியிருக்கும் விளம்பரமொன்றை ஆவணி மாதத்திய "விவேகபாநு" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருப்பதை இதனடியில் பதிப்பித்திருக்கிருேம்:—தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப் பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச் சேதப்படுத்தும் ஜெந்துகளென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்கும் தெரியும். மழைகாலத்தில் திடீரென்று உண்டாய் வெள்ளாமைகளுக்கு அதிக கெடுதிசெய்கின்றன. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறுவகைகள் இவைகளைத்தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக் கம்பளிப் பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங்கொட்டையைப்போல் உருமாறி மறுவருஷம் மழைகாலம் வரும் வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். மழைகாலம் ஆரம்பித்து தரை போதுமானபடி நனைந்ததும் இந்த

* நமது தஞ்சைஜில்லாவில் உயர்பதவி உத்தியோகம் வகிக்கும் ஓர் ஐரோப்பியருக்கு பெரியம்மை கண்டபோது யாதொரு சிகிச்சையும் செய்யாமல் மாரியாத்தாளுக்கு வேண்டிய பலிகளும், காணிக்கைகளும் செலுத்தி குணமடைந்தார். (பர்.)

பூச்சிகள் மேல்நோக்கித் துளைத்துக்கொண்டு தரைமட்டத்துக்கு வந்து, பொட்டுப் பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிகப்பு வரிகளுள்ள உடம்போடுங்கூடிய வெள்ளைப் பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப் பூச்சிகள் சாதாரணமாய்க் கொள்ளை கொள்ளையாய் ஒரே தடவையில் ஒருமிக்கக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச்சுற்றிலும் இவைகள் கூட்டமாய் திரண்டுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப் பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்பக்கத்தில் திரள்திரளாய் முட்டைகளிருக்கக்காணலாம். இந்த முட்டைகள் பொரிந்து பின் கம்பளிப் பூச்சிகளாகும்.

இதற்குப் பரிகாரமான உபாயங்கள்.—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால்தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி சுமார் 500 முதல் 1,200 முட்டைவரையிலும் இடும். ஆகையால் ஒரு பூச்சியைக் கொன்றால் பின்னிட்டு 500 முதல் 1,200 புழுக்கள் வரையிலும் கொன்றதுபோலாகும். நல்ல மழைபெய்து தரை தக்கபடி நனைந்ததும், கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்துசேர அதிக ஆவல். இந்தப் புழுக்களின் தொந்திரவுள்ள இடங்களில் சமயம்பார்த்து விளக்குப் பொறிகளை வைத்தால் இந்தப் பூச்சிகளை ஒருமிக்கத் தொலைத்துவிடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும் பூச்சிகளை தானாகக் கொல்லும் ஒரு சூத்திரம். இச்சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ், வந்த பூச்சிகளைக்கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலைக்கண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப்பொறி செய்துவிடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6-அணாவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெய் பாதியாகக்கலந்து உபயோகிக்கவேண்டும். தனி மண்ணெண்ணெயைவிட இந்தக் கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப்பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின் விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். $2\frac{1}{2}$ முதல் 3-அங்குலம் ஆழமும் சதுரமும் உள்ள ஒரு தகரத் தட்டம் இதற்கு ஏற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6-அல்லது 8-அணாவுக்கு எந்த தகரக்கடைக்காரனும் செய்து கொடுப்பான்.

இதில்லாவிட்டால் எற்றச்சால்போல் அகன்றவாயுள்ள எந்தப் பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கில் கால் நட்டு அதிலிருந்து தட்டத்திற்கு மேலே லாந்தரை தொங்கவிடவேண்டியது. ஆழமில்லாத பாத்திரமாயிருந்தால் அதன் நடுவில் ஒரு கல்வைத்து அந்தக் கல்லின்மேல் லாந்தரை வைத்துவிடலாம். எந்தப் பயிரைக்காக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப் பயிர்மட்டத்திற்குமேல் இந்தக் கருவி முழுவதும் உயர்ந்து இருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத் தெரியும்படி ஒரு மண் குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப் பொறிச் சோதனைகள்.—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதை சோதித்தறியும்பொருட்டு 1909-வருஷம் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மஞ்சக்குப்பஞ் ஜில்லாவிலிருக்கிற பள்ளிக்குப்பம் கிராமத்து நிலங்களில் 15-விளக்குப் பொறி வைத்திருந்தது. முதலில் ஒரு சிறு கூட்டம் முந்தியநாள் பெய்த 1-அங்குல மழைக்கப்புறம் ஜூலைமீ 23வ இரவிலும், பிறகு அதிலும் மிகப்பெரிய கும்பல் ஆகஸ்டுமீ 8வ பெய்த $1\frac{1}{2}$ அங்குல மழைக்குப்பின் 10வ சாயந்திரமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அவ்வருஷம் இப்பூச்சிகள் புறப்பட்டன. முதற் கூட்டமோ கொஞ்சம் 400-பூச்சிகள்தான் 4-ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்பலில் நாலிரவில் 7,400 பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 3,800 முதனாளிரவிலேயே பிடிபட்டன. இந்த 7,400 பூச்சிகளில் குறைந்த பட்சம் அலாவாசி பெட்டைகளாயிருக்கவேண்டும். ஒருபெட்டை 500 முதல் 1,200 முட்டைகள் வரையிடுகிறதென்பதை யோசித்துப் பார்க்கும்போது இந்தப்பொறி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாய் நாம் காண்கிறோம். இந்த உபாயத்தால் தப்புவிக்கப்பட்ட நிலங்களுக்கருகில் ஒரு பூச்சிகூட காணாததினாலே பள்ளிக்குப்பங் கிராமத்துக் குடியானவர்கள் இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்துகொண்டார்கள்.

முடிவு.—இந்த தந்திரத்தினால் பூரண நன்மையடைய வேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள் மட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப் பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச்செய்வதினால் அந்தப் புலங்களிலும் அவைகளுக் கடுத்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமல் பிடிபட்டிறக்கும் என்றாலும், இந்த விளக்குப் பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப்புலங்களிலிடப்

பட்டிருக்கும் முட்டைகள், பொறித்த புழுக்கள் கடைசியில் இங்கும் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லா குடிகளும் ஏகோபித்து கொல்லைகளெங்கும் விளக்குப்பொறிகளை கட்டாயம் நட வேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்கமுடியும் என்று நம்பலாம். ஒன்று சேராமல் போனாலோ இப்பொறிகளெல்லாம் கேலிக்குத்தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்) மழை பெய்து நின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும். முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப்பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும்விட அதிகமாயிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்த பின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூடவேண்டுமானால் (மழை நின்றவுடனே) சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகள் வைத்துவிடவேண்டியது அவசியம்.

விளக்குப் பொறி வைத்தல்,—செலவு சுருக்கமான விஷயம் அதற்குவேண்டிய கைம்முதல் ஒரு ரூபாய்க்குமேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத்தட்டம் உபயோகிப்பதனால் அது ஒரு 6 அல்லது 8 அணா மூங்கில் கால் சட்டம் வகைராவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்கு மேல் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பல வருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6 அல்லது 8 பைசா எண்ணெய் செல்லும் மொத்தத்தில் இரண்டு வாரத்துக்குமேல் விளக்கு வைக்க வேண்டியிராது. ஆனதினாலே எண்ணெய்ச் செலவு சுமார் 8 அணா பிடிக்கும். இந்தக் கம்பளிப் பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தை பார்த்தாலோ அரைவாசி முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் உயர்த்திக்கும் தக்க ஏகர் ஒன்றுக்கு 20 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் நஷ்டம் உண்டாகிறது.

---

நமது சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தங்கள் விலாசம் மாறும் போதெல்லாம் உடனுக்குடன் தங்கள் புதிய விலாசத்தைத் தெளிவாய் தெரியப்படுத்த கோறப்படுகிறார்கள். நமது சந்தா நேயரேனும், பிறர்களேனும் நமது ஆபீசுக்கு எவ்வித முகாந்திரத்தைக்கொண்டும் எழுதுபவர்கள் ரிப்ளை கார்டு எழுதினாலன்றி பதில்கிடைக்கமாட்டாதென்பதை அறியவும்.

பத்திராதிபர்.

## இரத்தம் (The Blood) தி பிளட்



அங்கமுழுவதிலும், இரத்தம் சென்று பாவும் வகை.

புற்பூண்டு மரம் முதலிய தாவரங்கள் சிலதில் இரசமும் மற்றும் சிலதில் பாற்களுமிருந்து அவைகளை போஷித்து வருவது போலவே, மனிதசரீரத்திலும், மற்றுமுள்ள ஜீவப்பிராணிகளிலும் இரத்தமென்னும் ஓர் வகை சிவந்த ரசம் ஒக்கப்பட்டிருக்கிறது. ரத்தமானது சரீரத்துக்குப்பிரதானமாயிருக்கிற வஸ்து; அதனால் நூதன சம்பவமும் (Development—டிவலப்மெண்ட்) வளர்த்தியும் (Groth—குரோத்) சமானமாக்கிக்கொள்ளுகையும் (Asslmilation—அஸ்லிமிலேஷன்) உண்டாகின்றன. ஜீவநிலைக்குக் காரணம் ரத்தமேயாம். அந்த ரத்தமானது உறுப்புகளால் ஸமரஸப் படுகின்றது. ரத்தம் தேகத்தைச் சுழன்றுகொண்டிருக்கும்போது திரவரூபமாயிருக்கும். அதைத்தேகத்திலிருந்து வெளிப்படுத்தினால் உறைந்துவிடும். ரத்தத்தில் ஜலமும் அணுக்களுமுண்டு. ஜலத்துக்கு ரத்தநீர்) Liquor Sanguinis—லிகர் ஸான்குவினிஸ்) என்றும், அணுக்களுக்கு ரத்த அணுக்கள் (Globules—கிளாபியூல்ஸ்) என்றுபேர், ரத்தநீரில் சீரம் (Serum) என்கிறஜலமும், பைபிரின் (Fibrin) லிம்ப் (Lymph) என்கிற இழைகளையொத்த பதார்த்தங்களுமிருக்கின்றன. ரத்தம்உறையும்போது பசையானது ரத்த அணுக்களைச்சேர்த்து இறுக்கிக்கொள்ளும். அதற்கு கிளாட் (Clot) எற்று பேர். சீரமானது கசிந்து கிளாட்டைச்சூழ்ந்து கொண்டிருக்கும். சீரமென்னும் ஜலத்தில் அல்பியுமன் (Albumen) என்னும் பதார்த்தமும், சில உப்புகளும், கொஞ்சம் கொழுப்பும் இருக்கின்றன. கிளாட் என்னும் உறைந்த ரத்தத்தில் பைபிரின் என்னும்

பசையான பதார்த்தமும் ரத்த அணுக்களும் அடங்கியிருக்கின்றன. ரத்த அணுக்களில் இரண்டு விதங்களுண்டு. அவைகளில் ஒன்று சிறுத்து சிவப்பாய், பக்கங்கள் அழுந்தி விஸ்தாரமாய் இருக்கும் மற்றொன்று பெருத்து வெள்ளையாய் குறைந்திருக்கும். சிவந்த அணுக்களே ரத்தத்துக்கு நிறத்தைக்கொடுக்கின்றன. அவைகளில்* அயம் உண்டு அந்த அயம் குறைவதே பாண்டு ரோகம். ஜலத்தைப்பார்க்கிலும் ரத்தம் அதிககனம், புருஷரைவிட ஸ்திரீகளுக்கு ரத்தம் கனத்தில் குறைந்திருக்கும். ரத்தத்திலிருக்கிற ஜலமானது காலத்துக்குக்காலம் பேதப்படும். போஜனத்தினாலும் திரிச்சலினாலும், காற்றினாலும் அதன் அளவு பேதப்படும். ரத்தத்தின் பிரயோஜனமாவது சர்வாங்கத்தையும் போஷித்து ஆதரிக்கின்றது. தேக போஷணைக்குறிய பதார்த்தங்களெல்லாம் ரத்தத்திலிருப்பதால் அது தேகத்தில் வியாபிக்கும் போது அந்தந்த உறுப்புகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை கிரகித்துக்கொள்ளும். அல்லது உறுப்புகளுக்கு வேண்டிய பதார்த்தங்களை, ரத்தம் கொண்டுபோய்க்கொடுக்கிறதென்றும் சொல்லலாம். தேகத்திலிருக்கிற பிரயோஜனமில்லாத பதார்த்தத்தைச் சேர்த்துக்கொண்டு ரத்த பரிசுத்த ஸ்தானமாகிய நுரையீரலுக்கு (Lungs) கொண்டு போகின்றது. நாடியிலிருக்கிற ரத்தம் அதிக சிவப்பாயிருக்கும். அது நல்லரத்தம், நாளத்திலிருப்பது கறுத்திருக்கும். அது கெட்ட ரத்தம். நாடி அறுபட்டால், பீச்சாங்குழலிலிருந்து பீரிடுவது போல் ரத்தம் பீரிட்டோடும். (Gets out) நாளத்திலிருந்து ரத்தம் கசியும் (oozes-out) மானிட தேகத்தில் சுமார் 30-பவுன் ரத்தமுண்டு. ஆனால் தேகக்கூறுக்கு தக்கபடி வித்தியாசப்படும்.

† இருதயத்தினுடைய அறைகள் சுமார் 4-அவுன்ஸ் ரத்தம் கொள்ளும். சரீர சுகத்திலிருக்கிற புருஷனுக்கு ‡ இருதயமானது ஒரு மின்

* Note—ரக்தத்திலுள்ள அயம் குறைவதே பாண்டு ரோகம், அயம் குறைந்தால் ரக்தத்திலுள்ள பரமாணுச்சிற்றுயிர்களின் அளவு குறையும். பாண்டுரோகத்தையுடைய ஒரு ஸ்திரீயின் ரக்தத்தைப் பரிக்ஷித்தபோது அதில் ரக்த அணுக்கள் 100-க்கு 46-பங்கு இருந்தபோது, அயஞ்சேர்ந்த அவுஷதங்களை அவளுக்கு கொடுத்து மறுபடியும் ரக்தத்தைப்பரிக்ஷித்தபோது ரக்த அணுக்கள் 100-க்கு 96-பங்காக தொகையிலதிகப்பட்டு அவளுடைய வெளுத்ததேகமும் உதடுகளும் மாறி அவள் முகத்தில் க்ஷேசரமுண்டானதாய்த்தெரிகிறது. இது பற்றியே சாதாரண ஜனங்களும் இளைத்தவன் இரும்பலபத்தின்பான் என்றுசொல்லுகிறார்கள்.

† இருதயத்தின் ஏற்பாட்டைக் காண்பிவிக்கிற சித்திரப்படம் அடுத்த சஞ்சிகையில் அச்சிடப்படும்.

‡ Note—மார்பின் இடது பக்கத்தில் ஐந்தாவது ஆறுவது விலாயெலும்புகளுக்கிடையில் கைவைத்துப்பார்த்தால் இந்த மார்துடிப்பு நன்றாய்க்கேட்கும். இதற்குக்காரணம் இருதயம் சுருங்கும் பொழுது அதன் உச்சி மார்பின் சுவற்றில் மோதுகின்றது. இதனாலேதான் மார்பில் கைவைத்துப்பார்த்தால் அடிப்பதுபோலத்தெரிகின்றது.

னிட்டுக்குச் சராசரி 70-முதல் 80-ஆவர்த்தி அடித்துக்கொள்ளும் ஆனால் குழந்தைகளுக்கு நாடி அதிக தீவிரமாக ஓடும். அது ஒரு மின் னிட்டுக்கு 120-முதல் 140-தாய் இருக்கும் ஸ்திரிகளுக்கு இருதயநடை அதிகப்பட்டிருக்கும். நடக்கும் போதும், நிற்கும் போதும், இருதயம் சீக்கிரமாயும், படித்துக்கொண்டிருக்கும் போதும், நித்திரை செய்யும் போதும் மெதுவாய் நடக்கும். இருதயத்தின் தொழில்—இருதயத் துக்கு கமலம் போல் விரிந்து குவிகிற இரண்டு தொழிலுண்டு, மேல் அறைகள் இரண்டும் ஏககாலத்தில் விரிந்து, ஏககாலத்தில் குவியும். கீழறைகளும் அவ்விதமாகவே விரிந்து குவியும். மேல் அறைகள் விரி யும்போது, கீழ் அறைகள் குவியும்; கீழ் அறைகள் விரியும்போது மேல் அறைகள் குவியும்.

ரத்த ஓட்டம் (Circulation of the blood—ஸர்குலேஷன் ஆவ் திபிளட்) இருதயத்திலுள்ள இடது பக்கமிருக்கிற சிவந்த ரத்தமானது, தேகமெங்கும் பரவி, உறுப்புக்களைப்போஷிக்கும். தேகத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்கள் ரத்தத்திற் கலந்து ரத்தம் கறுத்துவிடும். இவ்விதமாய்க்கறுத்துக் கெட்டுப்போன ரத்தமானது, இரண்டு பெரு நாளங்கள் (Venae cavae—வீனிகேவி) வழியாய் இருதயத்தின் வலது சிரவத்திற்கு (Right Auricle—ரயிட் ஆரிகல்) வருகிறது. அதிலிரு ந்து வலது சடாரத்திற்கு (Right ventricle—ரயிட் வென்டிரிகல்) இறங் கும். பிறகு அதிலிருந்து, புப்புஸ நாடி வழியாய் சுவாஸப்பைகுட் செல் லும். சுவாசப்பையில் இந்தக்கெட்ட ரத்தமானது, காற்றுவாடைபட்டு தோஷம் நீங்கி சிவந்து நல்ல ரத்தமாகி விடும். இவ்வாறு பரிசுத்தப் பட்ட ரத்தமானது பிறகு புப்புஸ நாளங்கள் (Pulmonary veins—பல் மோனெரி வெயின்ஸ்) வழியாய்இடதுசிரவத்திற்கு (Left Auricle-லெ ப்ட் ஆரிகல்) வரும்; அதிலிருந்து இடது சடாரத்திலிறங்கும். பிறகு அதிலிருந்து பெருநாடி [Aorta—எயார்டா] வழியாகச்சென்று தேகமெ ங்கும் வியாபித்து கெட்டுமறுபடியும் இருதயத்திற்கு வருகின்றது. இவ் விதமாக ரத்தமானது சதாகாலமும் தேகத்தைச் சுற்றிக்கொண்டே இருக்கின்றது. தாவரவர்க்கங்களிலுள்ள நிரவப்பசை வரண்டுபோன வுடன் அம்மரஞ்செடி கொடிகள் எங்ஙனம் பட்டுப்போகின்றதோ, அது போலவே ரக்த ஓட்டம் இருக்கிற வரையில் பிராணனிருக்கும், அது நின்றுவிட்டால் பிராணன் போய்விடும். உற்றுப்பார்த்தால் உதிரமே உயிர்!

That Blood is life is true and sure,
Therefore, O Man! Preserve it Pure.

## மலேரியா என்னும் முறைக்காய்ச்சல்.

மலேரியா என்னும் முறைக்காய்ச்சல் வராமல தடுப்பதைக் குறித்தும், வந்தால் அதற்குச்செய்யவேண்டிய சிகிச்சைகளைக் குறித்தும் ஜனங்களுக்குச் சாதாரணமாய்த்தெரியும்படி டாக்டர் Mr, U. ராமராவ் அவர்கள் எழுதுகிறதாவது.

1. இரத்தத்தில் அதை உறிஞ்சுகின்ற மிகவும் சிறிய கிருமிகள் இருப்பதால் இந்த முறைக்காச்சல் உண்டாகின்றது. இந்தக்கிருமிகள் இரத்தத்திலிருந்துகொண்டு விர்த்தியாகின்றன. மேற்படி கிருமிகளின் எண்ணிக்கை விஸ்தாரமான உடனே ஜவரத்தைக்கொண்டு வருகிறது.

2 மலேரியா கிருமிகள் இருப்பதின் முக்கியமான ஜாடையென்னவென்றால் சாதாரணமாய் தீர்மானிக்கக்கூடிய ஓர்விதமான ஜ்வரம் வருவது தான். இந்த ஜ்வரம் அடிக்கடி தணிந்து விடுகின்றது. தேக உஷ்ணமானது ஒரு வேளை சமஸ்திதிக்காவது அதற்கும் கீழ் ஸ்திதிக்காவது வந்து மறுபடியும் உயரும். இந்த ஜ்வரம் வழக்கமாக ஏற்பட்ட காலக்கிரமங்களில் வரும். 24 மணிக்கு ஒரு தடவையாவது, 48-மணிக்கு ஒரு தடவையாவது, அல்லது 72-மணிக்கு ஒரு தடவையாவது வரும்.

3. எந்தவிதமான ஜ்வரமாயிருந்தபோதிலும் அதற்கு மூன்று நிலைமைகளுண்டு. குளிர்ச்சியான நிலைமை, வெப்பமான நிலைமை, வேர்வை விடும்படியான நிலைமை. குளிர்ச்சியான நிலைமையில தேகமுழுமையும், தலை முதல் கால் வரையில், நடுக்கமுண்டாகும். இந்தக்குளிர்ந்த நிலைமையிலிருந்தும் உஷ்ணம் மாத்திரம் அதிகமாய்கொண்டுவரும். சிறிது நேரத்தின் பிறகு நடுக்கம் நின்றுபோம். உஷ்ணம் மாத்திரம் 103-அல்லது 104-சில வேளைகளில் 105-டிக்கிரி அல்லது அதற்கு மேலும் அதிகமாகும். சுமார் ஒரு மணி நேரத்தின் பிறகு உஷ்ண நிலைமை மறைந்துபோம் நோயாளிகளுக்கு விசேஷமாக வேர்வைவிட்டு ஜ்வரமும் சீக்கிரம் குறைந்து விடுகிறது.

### தடுக்கும் முறை.

4. முறை ஜ்வரம் தொத்து வியாதி. அது கொசுக்கள் மூலமாய்ப்பரவுகிறது. முறை ஜ்வரம் வந்திருக்கும் ஒரு மனிதனை ஒரு கொசு கடித்தால் அம்மனிதன் உதிரத்திலிருக்கும் கிருமிகளில் சிலது. அக்கொசுவின் வயிற்றில் புகும். அது அனோபலிஸ் ஜாதியில் சேர்ந்தவை போன்ற ஓர்விதமான கொசு

வாயிருந்தால் அதனுடைய வயிற்றில் அந்தக்கிருமிகள் அபிவிருத்தியடைந்து வயிற்றிலிருந்து ரத்தம் வியாபிப்பதால் வாயின் எச்சலில் சேரும். அந்தக்கொசு ஒருவனைக் கடிக்கும்போது இந்த விஷபதார்த்தை அம்மனிதன் ரத்தத்தில் பிரவேசிக்கச் செய்கிறது. பிறகு யாருடைய ரத்தத்திலிருந்து அந்த விஷம் எடுக்கப்பட்டதோ அவனுக்கு நேர்ந்த ஜ்வரம் போலவே இவனுக்கும் உண்டுபண்ணுகிறது. ஆகையால் மலேரியா ஜ்வரங்கள் கொசுக் கடியினால் தான் உண்டாகின்றன.

5. முன்னொரு காலத்தில் நினைத்திருந்தபடி நமக்கு மலேரியா ஜ்வரம் அசுத்தமான ஜலபானம் செய்வதினாலாவது, பூமியிலிருந்தாவது, அசுத்தமான நாற்றத்தைக் கிரகிப்பதினாலாவது உண்டாவதில்லை. ஜலமும் காற்றும் மலேரியாவுக்கு எவ்விதமாகச் சம்மந்தப்பட்டவையென்றால், அவைகள் மலேரியாவைக் கொண்டுவரும் கொசுக்களுக்கு இருப்பிடமாயிருக்கின்றன. மலேரியா ஜ்வரங்கள் கொசுக்கள் மூலமாய்த்தான் வியாபிக்கிறதென்பதும், ஒரு மனிதனிடத்திலிருந்து மற்றொருவனுக்கு வேறே எவ்விதமாயும் ஒட்டவைக்க முடியாதென்பதும் நிச்சயமாய்த் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

6 நல்ல ஒரு கொசுத்திரையில்லாமல் எப்போதும் நித்திரை செய்யக்கூடாது. உடம்பில் எங்கேயும் கொசுக்கடிக்காமல் இருக்கும் பொருட்டு, உடுப்புகளைப் போட்டுக்கொள்ளாமல மாலை வேளைகளில் வெளியே போகவாவது, வீட்டின் தாழ்வாரத்தில் உட்காரவாவது கூடாது. வீடுகளின் வாசல்களையும் ஜன்னல்களையும் கொசுக்கள் வரவொட்டாமல் வலைகளால் மூடிவைக்கவேண்டியது.

7. பெரிய கொசுக்கள் நல்ல வெயில் பொறுக்கமாட்டாது. ஆகையால் அவை வெயில் வேளையில் வீடுகள், செடிகள் இனனும் அப்பேர்ப்பட்ட இடங்களில் பதுங்கும். ஆகையால் மத்தியான வேளையில் இந்தக்கொசுக்கள் நம்மைக் கடிக்கும் என்றபயம் இல்லை. இந்த அனபலிஸ் கொசுக்களின் முக்கியமான குணம் என்னவென்றால், சூர்ய அஸ்தமனத்திற்கும் சூர்யோதயத்திற்கு மத்தியில் ராத்திரி வேளையிலேயே எப்போதும் கடிக்கின்றன. ஆகையால் பகல் காலத்தைவிட இராத்திரியிலேயே மலேரியாஜ்வரம் வருகிறதென்ற பயம்ஜாஸ்தியுண்டு.

8. பாய்ச்சலில்லாத குட்டைகளை யெல்லாம் உலர்ந்த மண்ணால் நிரப்பிட வேண்டியது. வீடு சுற்றிலும் ஜலம் நன்றாய்ப்போகும்படியான ஜலதாரைகள் கட்டிவிட வேண்டியது.

வீடு எங்கும் உலர்ந்து இருக்கவேண்டும். வெளியே போக்க முடியாத மீதி ஜலம் இருந்தால் அதில் கொசுக்கள் உற்பத்தியாகாமலிருக்கும் பொருட்டு அந்த ஜலத்தினமேல் கிருஸனுயில் போடலாம். அந்த கிருஸனுயில் ஜலத்திலிருக்கும் புழுக்களைக் கொன்றுவிடுவதோடும்கூட, ஜலத்தின் மேல் முட்டையிட வரும் பெரிய கொசுக்களையும் கொன்றுவிடுகிறது. மலேரியா ஜ்வரங்கள் இருப்பதாகத் தெரிந்தவிடங்களில் எந்த மாதிரியான நீர் தங்கலும் 10-நாள் அல்லது 14-நாள் நின்றிக்குமாயின் ஆரோக்கியத்திற்கு அபாயமாகவே நினைக்கவேண்டும்.

9 ஜலம் தங்கும்படியான உபயோகமற்ற உடைந்த வீட்டுச்சாமான்கள் அதாவது காலியான பூந்தோட்டங்கள், வெறும் தகர டப்பிகள் முதலானவைகளை ஜாக்கிரதையாய் அழித்துவிடவாவது அல்லது ஒழித்துவிடவாவது வேண்டியது. வீட்டின் உபயோகத்திற்காகத்தண்ணீரைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஆதாரமான எல்லாத் தொட்டிகளையும் வாய்க்கால்களையும் குறைந்த பக்ஷம் 8-நாளைக்கு ஒரு தடவையாவது சுத்தி செய்ய வேண்டியது. கனத்த ஒரு மழைபெய்தவுடனே தோட்டத்தின் நிலத்தைப் பரிசோதித்து அங்குமிங்கு மிருக்கும் சிறிய பள்ளங்களை யெல்லாம் நிறப்பிச் சமமாக்கவேண்டியது.

10. தூம்பு சேர்ந்த உடுப்புகளையாவது திரைகளையாவது, ஆணிகளிலும் முளைகளிலும் தொங்கவிட்டு வைக்கக்கூடாது. இவைகளால் தான் முக்கியமாய்க் கொசுக்கள் வந்து சேருகிறது. ஆகையால் அவைகளை நன்றாய் மூடப்பட்ட பெட்டிகளில் வைக்கவேண்டியது.

11. எவ்விதமான புகையும் கொசுக்களை துரத்தி விடும். இன்னும் புகை ஜாஸ்தியாயிருந்தால் அவைகளை அடக்கிவிடும். கொசுக்களைக் கொல்லவேண்டுமென்றால், வீட்டின் சந்துகள் எல்லாவற்றையும் நன்றாய் மூடிவிட்டுப் புகை நேராய் அந்தக் கொசுக்களிடத்தில் சேரும்படி செய்யவேண்டியது. சாதாரணமாய் ஆட்சேபனை இல்லாததும் இந்துக்கள் எல்லா வீடுகளிலும் கிடைக்கக்கூடியதுமானது சாம்பிராணி, இதையும் மற்றும் கந்தகம், வேப்பிலை, புகையிலை முதலானவகைகளையும் எரிக்கலாம்.

12. மலேரியா ஜ்வரத்தை வராமல் தடுப்பதற்கு எல்லாவற்றிற்கும் மேலானதும் நிச்சயமாய் நம்பக்கூடியதுமான வழியென்னவென்றால், இந்த ஜ்வரம் கண்டு இருக்குமிடத்தில் இருக்கும் வரையில் 7-நாளைக்கு ஒருமுறை இரண்டு அடுத்த நாளில் 10-க்ரெயின்ஸ் குயினு சாப்பிடவேண்டியது. மலேரியா கிருமிகள் சேர்ந்து இருக்கும் எல்லா மனிதர்களையும் குயினு கொடுத்துப் பரிசுத்தப் படுத்தவேண்டும்.

13. சிகிச்சை:—மலேரியா ஜ்வரத்தைச் சொஸ்தப்படுத்துவதற்கு குயினுதான் தகுந்த மூலிகை அதை முறைப்படி போதுமான அளவில் கொடுத்த விடங்களில் அது சொஸ்தப்படுத்தத் தவறினதேயில்லை. பெரியவர்களுக்கு ஜ்வரத்தின் எந்த நிலைமையிலும் 20-க்ரெயின்ஸ் குயினுவை எலுமிச்சம் பழம் ரசத்தில் சேர்த்துக் கொடுத்து விடலாம். முதல் தரம் கொடுத்த 6-மணி நேரத்திற்குப் பிறகு மறுபடியும் இன்னொரு தரம் 10-க்ரெயின்ஸ் கொடுக்கவேண்டியது. அம்மாதிரி 6-முன்ற ஆகும் வரையில் சாப்பிடவேண்டியது. அதன்பின் ஒருவாரம வரையில் 1-நாளுக்கு மூன்றுதரம் 2-க்ரெயின்ஸ் சாப்பிடவேண்டியது. வயிற்றைத் தள்ளும்படியான மருந்து ஏதாவது சாப்பிட்டு மலப் பிரவர்த்தி சரியாயிருக்கும்படி செய்து கொள்ள வேண்டியது. டாக்டர், ப. ராமராவ்.

## வர்த்தமானங்கள்.

இங்கிலீஷ் பத்திரிகைகள்:—உலகத்திலுள்ள பத்திரிகைகளில் 10068 இங்கிலிஷ் பாஷையில் பதிப்பிக்கப்படுகின்றனவாம்.

குருடர்களின் தொகை:—உலகத்தில் 10-லக்ஷம் பேர்களில் 60-பேர் குருடராயிருக்கிறுர்களாம்.

உலகத்தில் செலவழியும் மிளகு:—வருஷந்தோறும் உலகத்தில் செலவழியும் மிளகின் விலை 7,50,500 பவுனுகிறதாம்.

வெள்ளை யானை:—சியந்தேசத்தில் ராஹெங் நகரையடுத்த வனுந்தரத்தில் 3 அடி உயரமுள்ள ஒரு வெள்ளையானைக்குட்டி பிடிக்கப்பட்டு பாங்காக் நகரத்துக்கனுப்பப் பட்டிருக்கிறதாம்.

விலையுயர்ந்த முத்து:—பம்பாய் வர்த்தகர்களிடம் ஒரு அழகிய நல்முத்து பரீக்ஷைக்காக வந்திருக்கிறதாம். 34-காரெட் நிறையுள்ளதும், முக்கால் அங்குலம் பருமனுமான இந்த முத்து ஜோதிமயமாய்த் தோன்றுகிறதாம். இதைவிடச் சிறந்த முத்து உலகத்தில் கிடையாதென்று கூறுகிறுர்கள்.

பஸிபிக் சமுத்திரக் கரைக்கும் டென்வர் என்னுமிடத்துக்கு மிடையில் ஒரு ரெயில்வே போடப்படுகின்றதில் வேலை செய்துகொண்டிருந்த கூலிக்காரர்கள் ஒரு உப்புச் சுரங்கம் கண்டுபிடித்து இருக்கிறுர்கள். 15-மைல் நீளமும் 8-மைல் அக

லமும் அநேக அடி ஆழமுமாக தனி உப்புக்கட்டிகளாய் நிறைந்திருக்கின்றனவாம். இந்த இடத்தில் முன் ஒரு பெரிய உப்பு கடல் இருந்ததாகவும், அந்தக் கடல் ஏதோ காரணத்தால் தானாகவற்றி விட்டபொழுது அதிலிருந்து உப்பு இவ்வாறு உறைந்து கிடப்பதாயும் ஊகிக்கப்பட்டிருக்கிறது.

---

ஓர் புதியதந்தி :—கம்பியில்லாத தந்தியில் (Wireless Telegraphic) ஒரு நிமிஷத்தில் 200-வார்த்தைகள் பேசப்படுகின்றன. இப்போது டாக்டர் வால்டிமார் பவுல்கன் என்பவர் ஓர் நவீனத் தந்தி கண்டுபிடித்திருக்கிறார். இங்கிலாந்தில் கூலர்கேட்ஸ் என்னுமிடத்திலிருந்து டென்மார்க் தேசத்திலுள்ள கோபன்ஹேகன் பட்டணத்திற்கு இத்தந்தியின் உதவியால் ஒரு நிமிஷத்தில் 200 வார்த்தைகள் பேசப்பட்டன. காலத்திற்கேற்கவே ஒவ்வொன்றும் புதிது புதிதாய்க் கிளம்புகின்றது.

---

கேரோஸின் எண்ணெய்க்குப் பதில் :—அமெரிக்கா தேசத்தில் ஒரு பரீக்ஷகன் கெரோஸின் எண்ணெய்க்குப்பதிலாக சுளுவான ஒரு பதார்த்தத்தைக் கண்டுபிடித்திருக்கிறான். இதைச் செய்வதற்கு டின் 1-க்கு ஒரு அணா விலையாகிறது. இதைச் செய்யும் விதம் சில மூலிகைகளால் ஒரு விதமான உப்பை உற்பத்தி செய்து அந்த உப்பை ஜலத்தில் கரைத்தால் அவ்வளவு ஜலமும் எண்ணெயைப்போல் எரியக்கூடிய ஸத்துள்ளதாகிறதாம். கெரோஸின் எண்ணெயைவிட மூன்று மடங்கு வெளிச்சத்தை இந்த உப்பு ஜலம் கொடுக்கிறதாம்.

---

ஓர் நூதன வியாதி:—கிளாஸ்கோ நகரத்தில் மூளைக்கலக்கம் என்னும் ஒரு வியாதி இப்பொழுது தொற்று வியாதிபோல் எல்லாரையும் பிடிக்கத்தொடங்கி விட்டது. ஜனவரிமாதத்தில் 103 பேர்களுக்கு இவ்வியாதி கண்டதில் 51 பேர்கள் மரணமடைந்தார்கள். தினந்தோறும் அநேகப்பேர்களுக்கு இவ்வியாதி காணப்படுகிறது. இது பாதிக்கு மேல் பிள்ளைகளுக்குத்தான் வருகின்றது. மெல் பாஸ்டென்னுமிடத்தில் சமீபத்தில் இரண்டு குழந்தைகள் இறந்து போயின.

---

சமுத்திரத்தில் மண் எண்ணெ ஊற்றுகள் :—அரக்கன் கரையையடுத்த செடுபா என்னும் தீவுக்கூட்டங்களில் அனேகம் மண்ணெண்ணெய் ஊற்றுகள் உள்ளவைகளாயிருப்பதாகவும், அப்பகுதியில் எண்ணெய் ஊற்றுகளையுடைய தரை சமுத்திர மட்டத்திலிருந்து சொற்ப ஆழமட்டில் உயர்ந்திருப்பதாகவும், சமுத்திரத்தின் அடிவாரத்திலிருந்தும் எண்ணெய் ஊற்றுக்கண்கள்

திறந்து பொங்கி அப்பகுதிகளில் நீரோடு எண்ணெய் கலந்திருப்பதாலும், மரக்கலமோட்டுவோர் செடுபா தீவுகளை யடுத்துவரக் கூடாதென்றும், "கைபாக்பை" துறைமுகத்துக்குத் தெற்கிலிருந்துவிலகிப்போக வேண்டும் என்றும் கடலோடிகள் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## விசித்திரவிஷயங்கள்.

லோர்ட் வால்சிங்காம் பிரபு 1888-ஆம் ஆகஸ்டு௴ 30உ வேட்டைக்குப்போய் ஓரே தினத்தில்தான் ஒருவராகவே நின்று 1058 பறவைகள் சுட்டுக்கொண்டு வந்தாராம்.

லிவர்ப்பூல் நகரத்தில் சமீபத்தில் நடைபெற்ற குதிரைப்பந்தயத்தில் ஒற்றைக்கண் பொட்டையான குதிரையே முதல்வெற்றிபெற்றதாம். அந்தப்பொட்டைக்குதிரையை ஓட்டிக்கொண்டு சென்றவனும் ஒருகண் பொட்டயனு யிருந்ததுமன்றி அதற்குடையவரும் ஒற்றைக்கண் பொட்டையனும்!

இடிவிழுந்த விநோதம்:—பிரான்சு தேசத்திலடித்த பெரும் புயலினால் ஒரு சுமைக்காரன்மேல் இடிவிழுந்தபோது அவன் சற்றுங்காயப்படாமல் நிர்வாணமாக்கப்பட்டான். அவனுடைய காற்சட்டை, சப்பாத்து முதலியவைகள் பக்கத்தில் எரிந்துகொண்டிருந்தனவாம். அவனுடைய பாதங்கள் 4-அங்குலத்துக்கு நிலத்துள் தாழ்ந்திருந்தனவாம்.

விசித்திர விபரீதப்பிரவி:—உத்தகமண்டலத்திலொருவர் ஓர் பத்திரிகைக்கெழுதுகிறார். இரண்டு இருதயங்களுள்ள பிறவியைக்காண்பதரிது. ஆனால் இப்படி இவ்விடம் ஒரு பையனுக்கிருப்பதாக மூன்று வைத்திய பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மற்றவர்களைவிட இவனுக்கு இரட்டிப்பு பங்கு கிடைத்திருந்தபோதிலும் அதனால் அவனுக்கு யாதொரு அசௌக்கியமுமிருப்பதாகத்தோன்றவில்லை.

மின் சார சக்தியால் ரொட்டி சுடுதல்:—ஸ்விட்ஸர்லாந்தில் கொர்ன்ஸ் பட்டணத்தில் ஒரு ரொட்டிக் கடைக்காரன் மின்சார சக்தியால் ரொட்டி சுட்டு விற்பனை செய்கிறான். அவனுடைய அடுப்பின் நீளம் 8 அடி, அகலம் 4 அடி. இதில் தனித்தனி 2 பவுன் நிறை ரொட்டிகள் 50 ஏககாலத்தில் வேகும். இவைகள் வேகப்பிடிக்கும் நேரம் $1\frac{1}{2}$-மணி. பன்னிரண்டு மணி நேரத்தில், 400 ரொட்டிகள்போல் சுட்டு விற்பனை செய்கிறான்.

இரட்டைத் தலையுள்ள பாம்பு:—ஒரிஸா மாகாணத்தைச் சேர்ந்த டால்கர் ராஜ்யத்தில் ஒரு தோட்டத்தில் இரண்டு தலையுள்ள ஒரு பாம்பு பிடிக்கப்பட்டது. அதற்கு 4-கண்களும், 2 வாய்களும், 2-நாக்குகளுமிருக்கின்றனவாம். நீளம் ஒரு அடியிருக்கிறதாம். அது பிடிக்கப்பட்டு 20-நாட்களாகியும் ஆகாரம் கிடையாதாம். என்றாலும் உயிருடன் சௌக்கியமாய்த்தானிருக்கிறதாம். இப்பொழுது டேல்கோ டிஸ்பேன்ஸரியில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

---

கென்ட் மாகாணத்திலுள்ள கௌடன் நகரில் ஒரு புறு தினமும் இரண்டு மைலுக்கப்பாலுள்ள நாட்டுப்புறத்துச் சிறுவனைப்பின் தொடர்ந்து, பாடசாலைக்கு வந்து அச்சிறுவன் திரும்பும்போது தானும் திரும்புகிறதாம். அதுமட்டிலும் அப்புறு பாடசாலை இரைச்சலுக்கஞ்சாது பாடசாலைக்குள் குந்தியிருப்பதுமன்றி, உபாத்தியாயர் ஆர்மோனியம் என்னும் வாத்தியம் வாசிக்கும்போது, ஆர்மோனியப்பெட்டி மேலுட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்குமாம்.

---

## வைத்திய குறிப்புகள்.

1. மேகரணத்திற்கு:—துரிசு பலம் 1 சுண்ணாம்பு பலம் 1 விளக்கெண்ணெய் விட்டரைத்துத் தடவிப்போடவும்.

2. நெருப்புப்பட்ட புண்ணுக்கு:—ஊமத்தை இலைச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்து பூசவும். செம்பை இலைச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்து தடவவும். ஆவரங் கொழுந்தையும் நல் நல்லெண்ணெயும் கலந்து தடவவும். பசலை இலையை மோரில் அரைத்தும் பூசலாம்.

3. காதில் சீழ்வடிகிறதற்கு:—சாதிநாரத்தம்பழரசம், எலுமிச்சம்பழரசம், பசுமஞ்சள்ரசம், ஆதண்டைச்சாறு, பசும்பால், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய்வகைக்குச்சேர் 1, அரத்தை 2, மரமஞ்சள், சதக்குப்பை வகைக்கு பலம் 5. இவற்றை பதமாய்க் காய்ச்சி எடுத்துவைத்துக்கொண்டு தலை முழுகவும்.

4. இரத்தவாந்திக்கு:—பசுவின்நெய் சேர் $\frac{1}{4}$, எலுமிச்சம் பழச்சாறு சேர் $\frac{1}{4}$, இவற்றைக்கலந்து மூன்று நாட்களுக்குகொடுத்து வர இரத்தவாந்தி நீங்கும்.

5. மண்டையிடி, மண்டைக்குத்து. ஒற்றைத்தலைவலி இவைகளுக்கு:-நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்

ணெய், வ்ளைக்குப்பலம் 3 இந்திர மூலம், கஸ்தூரிபண்வெடை 1, கரி சிலாங்கண்ணிச்சாறு சேர் 5. இவற்றைச்சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி வடித்துத்தலை முழுகவும்.

6. மூலம், கிராணி, வயிறுகடுப்புக்கு:—கொம்பரக்கு, குந்தரிகம்பிசின், அதிவிடயம், குராசாணிஓமம், ஜாதிக்காய், அபினி இவற்றை வறுத்து நல்லெண்ணெய் விட்டரைத்து இம்மருந்தினையுட்கொள்ளவும். மூன்று நாள் வெந்நீர் சாதம் சாப்பிட கிராணி, வயிற்றுக்கடுப்பு முதலியன தீரும்.

7. சுரத்திற்கு:—பூரம் விராகனெடை 5, சுத்திசெய்தவெள்ளைப் பாஷாணம் விராகனெடை $1\frac{1}{4}$, இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றாலரைத்துப் பயரளவு உட்கொள்ள ஜுரம் தீரும்.

8. சூட்டுக்கு:—சீரகம் பலம் 5, மிளகு படி $\frac{1}{8}$, கிராம்பு பலம் $\frac{1}{8}$, சாதிக்காய் பலம் $\frac{1}{4}$, இவற்றைச் சோற்றுக்கற்றாழைச் சாற்றில், நாரத்தம் பழச்சாற்றில் எட்டுநாளூறப்போட்டுக் காயவைத்துப் பிறகு நான்கு நாட்களூறப்போட்டுக் காயவைத்து பனவெல்லம் பலம் ஒன்றுகூட்டி, இவற்றைப் பசுநெய்விட்டரைத்துத்தேற்றாங்கொட்டை வீதம் சாப்பிடச் சூடு தீரும்.

---

பாரிசவாய்வுக்கேற்ற அனுபோக முறை:—இந்நோயானது சாதாரணமாக வாத பூமியில் வாசஞ் செய்வோருக்கும், வாததிரேகிகளுக்குமே அடிக்கடி வந்து தோன்றும். இது மகா கொடிய நோய்களிலொன்றென்பதற்குச் சந்தேகமில்லை. அண்டவாய்வானது மேக நீரின் காரணத்தினால் நரம்பில் வீக்கந்தோன்றி, அதுவே குத்தும் குடைச்சலுமாய் மகாவேதனையைக்கொடுக்கும். உடனே அதற்கோர் மருந்து சாப்பிடாவிட்டால், அவ்வீக்கமே யிருக்க யிருக்க அவ்வுருவத்தை யண்டத்தை யொத்த பிண்டமாக வாக்கி விடுமென்பது உண்மை. நாமறிந்த மட்டில் இந்நோயானது, சென்னை, திருவல்லிக்கேணி பாகங்களில் வாசஞ்செய்வோருக்கும், இலங்கை தென்பாரிசமாகிய காலி (Galle) யிலும் மற்றும் வாத பூமியில் வாசஞ்செய்வோருக்கும் (எவ்வளவு பக்குவமாக விருந்தாலும்) சாதாரணமாக உற்பத்தியாகுமாகையால் இந்நோய் கண்டவுடன் கீழ் கண்ட சுலபமான முறையை உபயோகிக்கவும். அதாவது ஒருகோழி முட்டையில் சிறிது துவாரஞ்செய்து அதற்குள் இரண்டு மிளகெண்ட அளவில் (பிரமாணத்தில்) சுத்தமான பெருங்காயத்தை உட்செலுத்தி மேற்படி துவாரத்தை மாவினால் பொதிந்து முழுவேக்காடாக வேகவைத்து, உதயத்தில் பல்லிற்படாமற் சாப்பிடவேண்டியது. முட்டை சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு காப்பித்தண்ணீராவது மற்றும் ஏதாவது சாப்பிடவேண்டியது. இவ்வண்

ணம் 16-நாளைக்குச் சாப்பிட்டு வந்தால் எப்பேர்ப்பட்ட வாயுவையுங்கண்டித்து, சென்றது போக மிச்சத்திற்குச் சுகத்தைக் கொடுக்கும். பத்தியம் யாதொன்றுமில்லையென்றாலும் வாய்வு பதார்த்தங்களையும், கெடுதலான செய்கைகளையும் விலக்கிவைத்தலுத்தமம். முட்டை வாய்வு கண முடையதென்றாலும், காரஞ்சேருகிறபடியால் வலுவைக் கொடுத்து வாய்வைக் கண்டிக்குஞ்சஞ்சீவியாகும்! (S. V. மாால், புதுப்பேட்டை, சென்னை.)

---

# நமது "வைத்திய போதினி".

---

நம் இந்திய நாடு க்ஷேமமடைவதற்கு இன்றியமையாத முதற் காரணம் தேசாபிமானமும், அவ்வபிமானம் உண்டாவதற்கு பத்திரிகாபிமானமும் அவசியம் வேண்டுமென்பது யாவரும் அறிந்ததே. இவ்விதக்குறைவுகள் நம்மிடம் இருக்கின்றமையினாலேயே நம் எண்ணம் கை கூடவில்லை. நமது சரீர மனோசக்திகள் பெலங்குன்றி நிற்கின்றன, சுயநலவெறுப்பும் பொது நல விருப்பும் இன்னும் வரவேயில்லை. நம்மோர்களில் மிகச்சிறந்தவர் என்று பெயர் எடுத்து இருப்பவர்களுங் கூட தோத்திரப் பிரியரும் பிறரைக்கெடுத்து வாழ்கிறவரும் அனாதச் சொத்துக்களை அபகரிக்கிறவரும் அகிர்த்தியக்காரரும், விபசாரம், வேசித்தனம், ஜாதிபேதம் சமயபேதமுடையோரும், தான் சரியாய் வாழ்ந்தால் போதுமென்று நினைக்கிறவருமாயிருக்கிறார்களேயன்றி, உண்மையாய்ப் பொது நலத்திற்கும் சத்தியத்திற்கும் உழைப்பவர் ஆயிரத்துள் ஒருவரேனுங்கிடைப்பது அருமையாயிருக்கிறது. அன்றியும் தாம் அறிந்துள்ள அற்ப விஷயங்களையும் பிறருக்குச் சொல்லக்கூடாதென்னும் பொறாமையானது பூரணமாய் ஒவ்வொருவரிடத்திலும் குடிகொண்டிருக்கிறது இவ்விதக் குறைவுகளாலேயே நம்தேயம் அபிவிர்த்திக்குக் கூடவில்லை. சில ஆண்டுகளுக்குமுன் சில உத்தம சீலர்கள் எழுந்து இத்தகைய நம் நாட்டின் நிலைமையை நன்கு ஆராய்ந்து இவைகள் நீங்குவதற்கேதுவாக ஒருவர் அறிந்திருக்கும் அரிய விஷயங்களை பகிரங்கமாய் யாவரும் அறியும்பொருட்டு பத்திரிகைகள் நடத்த ஆரம்பித்தனர். பொதுவாய்ப்பத்திரிகையாலடையும் அபாரநலங்களனந்தம். ஒருவன் எவ்வளவு மந்த சுபாவமுடையவனாயிருந்தாலும் நாளடைவில் அவனுடைய அறிவை முதிரச்செய்து அவனைத்தக்க அறிவாளியாக்குவது பத்திரிகையே என்பதைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம்! ஒருவனுக்குள்ள கொடிய குணங்களைக்களைவதற்கும், பத்திரிகையில் பெரிதும் மேதாவிகளின் நோக்கம், நடையுடை, பாவனை, திறம் முதலியவனவே பொதிந்து கிடக்கின்றமை

யால், தாமும் அதனில் ஈடுபடவேண்டுமென்னும் மனவெழுச்சிக்கும் அப்படியே அவ்வரிய பழக்கங்களைத்தாமும் பெற்று மேதாவிகளாவதற்கும் இன்றியமையாத துணை பத்திரிகையைத்தவிர வேறில்லையென்பது தேற்றமே. இத்தகைய நிரந்தரமான பயனைத்தந்து நிற்பனவும் நம் நாட்டில் நடைபெறுவனவுமான பத்திரிகையில் எப்பத்திரிகையாயிருப்பினும் அவையெல்லாம் மென்மேலும் செழிந்தோங்குக.

பொதுப்பட பத்திரிகையின் குணம் இவ்விதமிருப்பின் அதிலும் இவ் "வைத்திய போதினி" முதலான இவைபோன்ற சர்வோத் கிருஷ்டமானதும், லோகோத்தாரமானதுமான பத்திரிகையின் பான்மையைப்பகரவும் பெறுமோ. இவ் வைத்திய போதினியின் நன்னோக்கம் இதன் பெயரே நன்கு விளக்கும், அன்றியும் அறிவாளிகளால் ஏனைய பத்திரிகையின் பாராட்டங்குன்றித் தற்காலம் இதுவே தலையெடுத்து நிற்பதே போதுமானதாயிருக்கிறது. இதில் யாவரும் சுகபாக்கிய பொக்கிஷத்தை அடையும் வழியும் விசேஷமாக வைத்திய சாஸ்திராநு சாரமான விஷயங்களும் நிரம்பி இருக்கின்றமையால், இஃது யாவருக்கும் இன்றியமையாத் துணைக் கருவியாயிருக்கிறது. அவற்றிலும் அரிய சித்திரப்படங்களுடன் வியாக்யானப்படுத்துவதில் பத்திராதிபரின் வித்வ சாமர்த்தியமும் அரிய பெரியநூற்களில் தாம் அடைந்திருக்கும் அநுபவங்களைத் தெள்ளி தினுணர்த்தும் போதனு நுணுக்கமும் பார்ப்போர்க்குத்தெற்றெனவிளக்காமலிரா.

சில பத்திரிகைகள் எடுத்தளவில் பிரீதியைக்கொடுத்து பின்னர் நாளுக்குநாள் குறைந்து இருந்த இடமும் தெரியாமல் போய் விடுகின்றன. அவைகளெல்லாம் பத்திரிகைகளுக்கு அழகன்று, ஒவ்வொருவரையுந் தேடிவரும் பத்திரிகையானது நண்பரைப்போன்றது. "நற்றறிந்தோர் கேண்மை நுனியிற் கரும்பு தின்னற்றே" என்பதுபோல் ஆரம்பத்தில் சிறிதாகவும், நாளடைவில் பெரிதாகவும் விர்த்தியடைவிக்க வேண்டுமென்னும் பத்திராதிபரின் கருத்து எளிதில் யாவருக்கும் விளங்கும்.

இவை நிற்க:—லோகோத்தாரமான பத்திரிகா நிர்வாகத்திற்கும் பிரதானம் சந்தாநேயர்களின் பேருதவியேயாகும். இவ்விதப் பத்திரிகையாகிய உடலுக்கு உயிர்போன்ற நண்பர்களாகிய நாமெல்லோரும் இதுகாறும் இதன் அருமையான தோழமை பெறுவிடினும், உடனே பெறுவதுடன் நாம் அடையும் இன்பத்தையே நம்மைச் சார்ந்த பல்லோர்க்கும் அடைவிக்கவேண்டியது. கற்றோர் கடனுதலின் யாவருக்குங் காண்பித்து அபிவிர்த்திசெய்யவும் நமது கடமையினும் முக்கிய கடைமையே. சர்வகலா சாலையிற் பயின்ற ஆங்கிலேய விற்பனருக்கும் இப்பத்திரிகை பயன்படத்தக்கதே. ஏனெனில் தமிழின் விர்த்திக்கும் அஞ்ஞான அந்தகாரத்தில் ஆழ்ந்தியிருக்கும் தம் மனைவி மக்கள் சகோதரர் சகோதரிகள் முதலோர்க்கு அறிவு ஊட்டுதற்குமென்க.

இங்ஙனம்,

**M. S. சுந்தரமாசாரி,**

மார்க்கயன்கோட்டை.

# பழங்களிலும் மின்சாரமிருக்கின்றது.

உலகத்து மாந்தர் பல்லோருக்கு அதியாச்சரியமான ஆநந்தத்தையும், இலாபங்களையுந்தருவதான வேலையைச்செய்து ஜன சமுகத்திற்குப் பெரிதும் உற்றதாயிருக்கிற மின்சாரசக்தியின் வல்லமையைப்பற்றி நம் பூர்வீக ஆரியர்களே நன்கு அறிந்து காரியங்கள் செய்திருக்கிறாரென்பதற்கு ஆதாரங்கள் வேண்டிய வளவு இருக்கின்றன. ஜைன விக்கிரகம் ஒன்று நாகப்பட்டணத்திலிருந்ததும், அதைக் களவாடிக்கொண்டு ஸ்ரீரங்கம் சேர்க்க திருமங்கைமன்னன் போந்து அதனைத்திருடிக்கொண்டு ஸ்ரீரங்கம் சென்று நம்பெருமானுக்குத் திருமதில் கட்டுவித்ததுமான கதையைக்கேட்டவர்கள் இப்போதைய மின்சாரசக்தியை மிதுதியும் வியக்கமாட்டார்கள். அப்போது எலக்டிரிக்வல்லமையால் ஜைனப்பொன் பிம்பம் "ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ, பூயத்தால் மிக்கதொரு பூகத்தாலாகாதோ, தேயத்தேபித்தளை நற்செம்புகளாலாகாதோ விம், மாயப்பொன் வேண்டுமோ மதித்தென்னைப் பண்ணுகைக்கே" என்று மொழிந்து ஸ்ரீ ஆழ்வார் மைத்துனன் அதனை அபரிசுத்தப்படுத்தலும் ஓடுதலும் பேசுதலுமொழிந்து பொட்டென விழுந்திட்டதென்றால் அக்காலத்து இம்மின்சாரசத்தி எத்துணை யற்புதமான வேலைகளில் நம்மவர்களால் உபயோகப்பட்டிருப்பதென்பது எவருமெளிதி லறியலாகும். அப்பேர்ப்பட்ட ஜாதியார்களாகிய நாமே இப்போது பிறர் செய்வதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, நாமும் எதுவும் தெரியாதவர்போன்று காலங்கழிக்கிறோம். இதுவொரு விஷயமே பூர்வகாலத்திய நம்மவர்களுக்கும், இக்காலத்திய நம்மவர்களுக்கும் உள்ள பேதத்தைத் தெற்றென விளக்கிக் காட்டுகின்றது. மின்சார சாஸ்திரம் போன்ற எல்லாச் சாஸ்திரமும், நம்மிந்துக்களறியாததில்லையானாலும், அதனை அக்காலந்தொட்டு அநுபவமுறையில் கையாண்டு வழக்கத்திற் கொண்டுவருபவரில்லாது போனதே நமது ஜனசமூகத்தில் ஓர் பெருங்குறையும், பெருத்த அறியாமையுமாய் நின்றிருக்கின்றது.

மின்சார சக்தியினால் வண்டிகள் ஓடுவதும், செய்திகள் போக்குவரத்து செய்வதுமான அபூர்வகாரியங்களும், இன்னும் எவ்வளவோ மகத்தான காரியங்களும் நடக்கின்றனவென்பது உலகப் பிரசித்தமே. ஒன்றுடன் மற்றொன்று உராயப்படின் மின்சாரசத்தி எதனிடத்துமுண்டாகிறதென்பது பலரும் அறிந்த விஷயமாயிருக்கிறது. ஏறக்குறைய எல்லாப் பொருள்களிலும் இப்படி மின்சார சத்தியுளதென்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பினும் பழவகைகளில் மின்சாரசக்தியுளதென்று இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. ஏறக்குறைய எல்லாப் பழவகைகளிலும் இச்சத்தியுண்டெனவே கொள்ளல் இன்றியமையாததாயிருக்கின்றது. திராட்சைப் பழங்களென்ன, முத்துக்கொட்டை, இலுப்பைக்கொட்டை, கொட்டைப்பாக்கு முதலியவைகளென்ன, இவைகளினெல்லாவற்றிலுமே இம்மின்சார சக்தி பரவியுள்ளதென்று ஒரு ஐரோப்பிய மின்சார சக்தி வல்லுநர் கண்டு பிடித்திருக்கிறதாகத் தெரியவருகிறது. அநேகர் பழங்களிற்கூட மின்சாரம் இருக்கிறதா என்று ஆச்சரியப்படுவார்கள். இப்பழங்களும், கொட்டைகளும், ஏறக்குறைய காய்கறி பதார்த்தங்களும் இம்மின்சார சக்தியின் மூலஸ்தானமென்றே சொல்லும்படியாயிருக்கிறது. மேற்கூறிய பழங்களிலும், காய்கறி பதார்த்தவகையராக்களிலும் இம்மின்சார சத்தியுள்ளபோதிலும், அவ்வப்பழங் கொட்டை பதார்த்தவகைராக்களின் தன்மைகளைப் பொறுத்து அம்மின்சார சத்தியாங்காங்கு குடிகொண்டிருப்பதைப் பரி

சோதித்துப்பார்க்க ஒரு இலேசான (Galvanometre) கால்வனுமீடர் என்று சொல்லும்படியான மின்சாரமளக்குங் கருவி தேவையாகும்.

பூமியி லெப்போதும் ஒருவிதமான (Negative Electricity) எதிர் மறை மின்சார சத்தியும், காற்றில் உடன்பாட்டு (Positive Electricity) என்றதோர் மின்சார சத்தியும், இயற்கையாய் வியாபித்திருக்கின்றன. தண்ணீரின் உதவியே பூமியில் வித்யுத் (Electricity) நிலைகொண்டிருப்பதற்குற்ற காரணமாகும். அம்மாதிரியான வித்யுத் சக்தி பூமியிலுள்ள தண்ணீர் ரூபமாம். அச்செடி கொடிகளிலுள்ள பதார்த்தங்களில் ஸாரமாய் ஏறி நிற்கிறது. செடிகொடி வகையராக்களின் வளர்ச்சியில், பூமி மின்சாரசத்தி கொண்டிருக்கிறவரையில் அச்செடி கொடிகளில் ஸாரம் பிரவகித்து வருவதாகும். செடியின் சில பாகங்கள் மின்சார சத்தி கொண்டிருக்கும் சிறிய அறைகளாயிருந்து வருகையில், அச்செடிகளில் மின்சார சத்தி கொண்டிருக்கு மடியிட மொன்றுவது பூமியுடன் சம்பந்தப்பட்டும் இவற்றிற் செல்லாம், பாஸிடிவ் எலெக்டிரிஸிடி கொண்ட காற்றும், ஒருபுறத்தில் மரங்களினிலை வளர்ச்சிக்காவது, பழம் காய்களின் வளர்ச்சிக்காவது காரணபூதமாய் விளங்கும். இயற்கையாய்ப்பூமிக்கும் செடி கொடிகளும் சம்பந்தப்படுத்தும்படியாய் வியாபித்திருக்கும் மின்சார சத்தி அச்செடி இயற்கையாய் ஒடிந்தாவது, அழிந்தாவது, மனிதரால் அருக்கப்பட்டாவது கீழ் விழுகிறவரையில் அவைகளுள் பொருந்தியிருக்கின்றது.

பழ வகைகளில் மின்சாரசக்தி பொருந்துவது மிகவும் சாதாரணமேயாம். பூமியிலுள்ள வித்யுத்சக்தியும் ஆங்குள்ள நீர் ஈரத்துடன் சம்மந்தப்பட்டு அச்சக்தி பூமியில் ஈரமுள்ள வரையில் செடியிலுள்ள பழங்களில் இலேசாய் வியாபித்து நிற்றல் எளிதாகின்றது. காய்ந்த மணல் இச்சத்தியைப் பரவச்செய்யும் சுபாவம் பொருந்தியில்லாததானது, செடிகொடிகள், பூமியில் ஈரமில்லாது போகுங்காலத்தில் தளிர்க்காது அழிந்து போவது நிதர்சனமாகக் காட்டும். பூமியிலுள்ள நீரே, செடியின் ஒவ்வொரு பாகத்திலும் வியாபிக்கும் ரஸம் அல்லது ஸாரத்தின் பிரவகித்தலுக்குக் காரணமாகி இவ்வீரமே ஸாரமாகி செடிகளின் நுனிவரையில் புகுந்து பாய்வதாகின்றது. பின்னர் இலைகள் தளிர்க்க ஆரம்பிக்கப் பூமியிலிருந்து சத்தி அதில் தாக்குகிறது. இலைகள் நன்றாகத்தளிர்க்கவும், அவற்றில் வித்யுத்சத்தி பிரவேசிக்க புட்பங்களும் அச்சத்தி மகிமை கொண்டு தாராளமாய் பூப்பனவாகின்றன. இப்படியே காய் காய்த்துப் பழம் பழுக்கையிலும் இச்சத்திகளுதவிகொண்டு தான் அவைகள் இயங்குகின்றன. இவ்வாறு பழங்களில் இம்மின்சாரசத்திகள் பொருந்தியிருப்பனவாகக் கண்டுபிடித்தவர் சீமை இலந்தைப் பழங்களிலும், இரண்டாவதாக கிச்சிலிப்பழங்களிலும் (Apples and Oranges) விசேஷமான மின்சார சக்திகள் பொருந்தி யிருப்பனவாகவும், அவைகளில் மின்சார சக்திகள் தங்கு மறைகளே பிரத்தியேகமா யிருப்பனவாகவும் கண்டுபிடித்தார். எவ்வெப்பழங்களில் உட்பாகம் பகுதி பகுதியாய்ப் பிரிக்கப்பட்டு சாராம்சங்கள் மிகுந்திருக்கின்றனவோ, அம்மாதிரியான பழங்களில் விசேஷமான மின்சார சக்திகள் பொருந்தியிருப்பதாகவே கண்டுபிடிக்கப்பட்டது. பேரிப் பழங்களிலும், இவை போன்ற பழங்களிலும், பரீக்ஷார்த்தமாகப் பாதியாகப் பகிர்ந்து பார்த்தால், ரசாயன பரீக்ஷகர்கள் அவைகளில் இச்சத்திகள் எம்மாதிரியாய்ச் சேமித்து வைக்கப்பட்டதென்பதறிவார்கள்.

இப்பேர்ப்பட்ட பழங்களில் இருப்பதுபோல வெகுவாய் இல்லாமற் போனபோதிலும், காய் கறிகளிலும் ஏதோ கொஞ்ச பாகமாவது மின்சாரசத்தி பொருந்தியிருக்கின்றது. ஈசுவர சிருஷ்டியில் இயற்கையாய் இப்பழவகையராக்களில் அமைந்திருக்கும் அதியற்புத சக்திகளையறிந்து உள்ளுக்குச் சௌகரியமாய் அவைகளை உபயோகப்படுத்தி திடகாத்திர சரீரங்கள்பெற இம்மின்சார ஆராய்ச்சிக்காரர் எவ்வளவோ காரியங்கள் செய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் இப்பழங்களிலும் காய்கறி வகையராக்களிலும் செய்யும் இச்சோதனைகள் முற்றுப்பெற வேண்டுமென்பதே எல்லாருடைய கோரிக்கையுமாம். (நாகரீகன்.)

---

1. வைத்திய போதினியின் ஜூன்மீ பத்திரிகையில் V. A. கேசவன் என்று கையொப்பமிட்டு எழுதியிருக்கும் விடுகதைகளுக்கு விடை.

(a) மதலை......துன்பமானல் இப்பூமண்டலத்தில் மானிட ஜன்மம் எடுத்து வரும் ஜனங்கள் எல்லாம் தாம்தாம் தங்களுக்கு மகவை பெறும்வரை துன்பமில்லை. குழந்தையை பெற்று, பெற்ேறார் என்று பெயர் வரும் பரியந்தம் மிகுந்த சந்தோஷமாக இருக்கலாம்.

(b) எங்கள்......கறக்கும், கள்ளி.

## விடுகதை வினு.

ஓர் மனிதன் 25 மாங்கன்கள் கொண்டுவந்தான் அவன் அவைகளை பனிரெண்டு வரிசைகளாகவும், மேலும் வரிசை ஒன்றுக்கு 5 மாங்கன்கள் வீதம் வைக்கவேண்டும் என்று யோஜித்து அப்படியே செய்தான். ஷெ 25 கன்களை எப்படி 12 வரிசைகளாகவும் வரிசை ஒன்றுக்கு 5 மரங்களாகவும் வைக்கக்கூடும். (வீ. ஆதி, தஞ்சாவூர்.)

## CONUNDRUMS.

I am not very big. I am not very old.
But I will do. What I am told.
And tell me who I am. (V. A. KESAVAN.)

## ஞானம்.

நாம் இந்த உலகத்தைக் காட்சியாலறிந்து உலகத்துக்குக் காரணம் உண்டென்று யுக்தியாலறிகிறோம். உலகத்துக்குக் காரணம் மனுஷீகமானது அல்ல என்பது நிச்சயமானதால் அக்காரணம் தெய்வமேஎன்று அனுமானிக்கிறோம்.

உலகத்துக்குத் தெய்வமே காரணமானதால் நாம் இருப்பதற்கும், கண், வாய், கை முதலியதைப் பெற்றிருப்பதற்கும் தெய்வமே காரணம் என்று யுக்திப்பிரமாணத்தால் அறிகிறோமல்லவா? மனச்சாட்சி எனும் பிரமாணத்தாலோ இன்னொரு அறிவுவரும். பாவம் செய்வதோ சன்மார்க்கமாய் நடப்பதோ, எது நமக்கு கடமை என்று கேட்டால் பாவம் அல்ல சன்மார்க்கமே கடமை என்று மனச்சாட்சி திட்டமாய் அறிகிறது. ஆகையால் பாவ உபயோகத்துக்காக அல்ல.

## ஹாஸ்ய துணுக்கு.

103-வது பக்கத்தின் தொடர்ச்சி.

ஓர் உபாத்தியாயர் தன்னிடம் வாசித்து வரும் பிள்ளைகளில் ஒருவனைப்பார்த்து என்னடா பையா நான் கேழ்க்கப்போகிற கேழ்விக்கு உத்திரம் அளிப்பாயா என, பையன் அப்படியே செய்கிறேன் எனவும்,

உபாத்தியாயர் "கேள்வி" சர்க்கரை என்ன மாதிரி இருக்கும் சொல் என்றார்.

பையன்:—என்ன சார் இதுதானா ஓர் பெரிய கேழ்வி இது எனக்குத்தெரியாதா என்று சர்க்கரை, இஞ்சியைப்போல் புளித்துக்கொண்டிருக்கும் என்றானாம்! இதற்குள் மற்றொரு பையன் எழுந்திருந்து உபாத்தியாயரைப் பார்த்து என்னசார் இத்தனை நாள் தங்களிடம் கல்வி கற்று இன்னும் சர்க்கரை, இன்னதென்று உணராமல் சர்க்கரையை கடுக்காயாக நினைத்து இஞ்சியைப்போல் புளித்துக்கொண்டிருக்கும். என்று சொல்கிறான் என்றானாம்! (வீ. ஏ. கேசவன், தஞ்சை.)

அடியில்கண்ட சந்தாத்துகைகளை வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

| | ரூ. |
|---|---|
| Mr. கோதண்டபாணிமூப்பனார் | |
| ,, K. S. Raj & Co. | 1 |
| ,, வெள்ளையநாடார் | 1 |
| ,, S. R. ரெங்கசாமிஐய்யர் | 1 |
| ,, G. Z. Thomes | 1 |
| ,, V. C. Narayanasawmy | 1 |
| ,, G. ராமானுஜம்ஐய்யங்கார் | 1 |
| ,, P. அனந்தநாராயணஐய்யர் | 1 |
| ,, C.S. Ramachandra Iyer | 1 |
| ,, V. பஞ்சாபகேசய்யர் | 1 |
| ,, J. Sammuel | 1 |
| ,, K. V. கந்தையா | 1 |
| ,, D. Thomas | 1 |
| Mr. ஐயாசாமிராவ் | |
| ,, சு. சிவசிதம்பரம்பிள்ளை | 1 |
| ,, T. மாசிலாமணி | 1 |
| ,, K. கோவிந்தராஜா | 1 |
| ,, Thomas (Nazarath) | 1 |
| ,, Joseph V. Fernandez | 1 |
| ,, S. V. நடராஜய்யர் | 1 |
| ,, S. N. சுந்தரேசஐய்யர் | 1 |
| ,, S.P. கல்யாணசுந்தரஐய்யர் | 1 |
| ,, தி. ந. தியாகராஜய்யர் | 1 |
| ,, ஜான்தெய்வசிகாமணி | 1 |
| ,, M.V. வெங்கிட்டராமய்யர் | 1 |
| ,, M. Bastian Pinjora | 1 |


## கர்மயோகி

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

ஆரியதர்மம், பாரதநாட்டுக்கலைகள், தொழில்கள், காவியங்கள், சாஸ்திரங்கள், ராஜாங்க விஷயங்கள் முதலானவற்றை யெல்லாம் பற்றி விவரிக்கும். யாவரும் வாசித்து எளிதிலுணரத்தக்க விதத்தில் சாதாரணமான இனிய தெளிய தமிழ் நடையில் எழுதப்படுவது. இதைவிட அருமையானதும் குறைந்த சந்தா உள்ளதுமான பத்திரிகை தமிழ் நாட்டில் வேறே கிடையாது. மாதிரிப் பத்திரிகை வேண்டுவோர் காலணாக் கார்டு எழுதினால் உடனே அனுப்பப்படும்.

### சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு 1-வருஷம் ரூபா 2—0—0. 6-மாதம் ரூபா 1—4—0. பினங்கு, சிங்கப்பூர் முதலான விடங்களுக்கு ரூபா 3—0—0. தனிப்பிரதி அணா 4.

"கர்மயோகி" பத்திரிகைக்குத் தமிழ் நாட்டிலும், வெளித்தேசங்களிலுள்ள தமிழ்க் குடியேற்றங்களிலும் ஏஜெண்டுகள் வேண்டும். ஏஜெண்டுகளுக்குத்தக்க சம்பளங்களும், கமிஷன்களும் கொடுக்கப்படும்.

தாம் இதுவரை சந்தாதாரில்லாவிட்டால் உடனே ஒருபோஸ்டுகார்டு எழுதி பெயரை பதிந்துகொள்க.

மானேஜர், "கர்மயோகி காரியஸ்தலம், புதுச்சேரி.

## சுத்தமான வெள்ளிப் பாத்திரங்கள்.



கூஜா, டம்ளர், சொம்பு, பஞ்சபாத்திரம், கிண்ணி, டீசெட், காப்பு, புதுச்சேரி கொலுசு, பட்டை கொலுசு முதலியவை மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுள்ளவைகளாய் விற்பனைக்கு தயார் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

**V. B. வெங்கடேசம் செட்டியார்,**
ஜவுளி, வெள்ளி பாத்திர வியாபாரம்.
பெரிய தெரு தும்பகோணம்.


## தேசிக ஸம்பிரதாய விவர்த்தினீ ஸபா.

இந்நாமதேயம் பூண்ட ஓர் ஸங்கம் இத்திருக்குடந்தை திவ்யக்ஷேத்ர வாஸிகளாகிய சில சாஸ்திர வித்வான்களினுதாரணையின் கீழ் சென்ற $1\frac{1}{2}$-வருஷகாலமாக நடைபெற்றுவருகிறது.

இச்சபையார் தூப்பில் நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்திருக்கிற ஸ்தோத்ரபாடங்கள், ராமானுஜ மதகிரந்தங்கள், திருப்பாவை முதலிய பிரபந்தங்கள் இன்னும் பொது ஜன ஸாதகார்த்தமாக அப்போதைக்கப்போது தேவையாகத் தோன்றும் பல கிரந்தங்களேயும் ஸம்ஸ்கிரத வியாக்கியானத்துடனும் தமிழ் மொழி பெயர்ப்புடன் பிரசுரித்து வருகிறார்கள். வர்ணாசிரமதர்மங்களைப் பரிபாலிப்பதி லுண்மையான அபிமானமுள்ளஒவ்வொருகனவானு மிதை கவனித்தலவசியம். **சந்தா விபரம்.** அயலூராருக்கு 12-ஸஞ்சிகைக்கு முன் பணம் கட்டவேண்டியது ரூபா 3—6—0. உள்ளூராக்கு ஸஞ்சிகை 1-க்கு 0—4—0. அயலூராருக்கு தபாற்கூலி உள்பட 0—6—0.


ஓம்: வந்தேமாதரம்.

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல் நோயையும் தவாரது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்தி மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மானவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணா 2. டிஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

N. A. S. Iyer F. T. S.
புரோப்ரைட்டர்,
**பாலசந்திர டிரேடிங் ஹால்,**
ஆலங்குடி, நீடாமங்கலம் S. I. R.

கும்பகோணம் ஆனரயிள் திவான்பகதூர் மகாகனம் பொருந்திய R. ரெகுநாதராயர் அவர்கள் C. S. I. சொல்லுகிறதாவது,
I have used this tooth powder. I found it usefull.
(Sd.) R. RAGUNATHA RAO.

# ARYAN INITIATION!

OF THE

# SPIRITUAL BROTHERHOOD!!

OF THE

# INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE, No. V. P. System. Look sharp!

SELF-CULTURE, a Monthly Official Journal of the Indian Academy of science, is devoted to Mental, Psychic, Spiritual and Occult Sciences Philosophy, Spiritualism, Health-Culture, Vedanta and other Esoteric phases. It is edited by Dr. K. T. Ramasami, Dr. J. M. Peebles of (America) and Prof, J. M. Severn (of England.) Besides it has an able crops of contributors.

Annual subscription Rs. 3, to India. Foreign Sh. 4; To School Students and all Missionaries at a reduced rate of Rs. 2.

Send all orders and remittance direct to

*The Manager,*

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**

KIZHANATTAM, Tinnevlley, Dist. S. India

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

23. கேசஸுவாசனி :—உசிதமான சீமை வாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும், வளரும். கண்கள் குளிரும், தலைநோய் போகும், மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

24. இரக்ஷாமிர்தம் :—தாவரவர்க்கத்தைச்சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி, தேயிலைக்குப்பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அறைக்குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரா முதலிய காலங்களில் ஷை சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலை சேர்க்காமல் சமயத்திற்கு தக்கபடி உபயோகிக்க ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவது மன்னியில் நோய்வராமல் காக்கும். பித்தவாயு, காசம், க்ஷயம், அஜீரணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளை போக்கும். இரத்தத்தை சுத்தி செய்து தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மது மூத்திரம், அதி மூத்திரரோகிகளுக்கும் அருமையான வஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்து வந்தால் மது மூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும், நீரின் அளவையும் குறைத்து மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தை சாந்தி செய்யும். மூளையை பலப்படுத்தி ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் பகைக்கத்தக்க குணமுள்ள காபி தேயிலையை விட்டுவிட்டு இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6. வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகமாகும்.

25. சர்பத்துகள் :—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜாபுஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், தருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம், இஞ்சி சர்பத்துகள். ஷை சர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது சோடாவாடரிலாவது சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும் எந்த பழ சர்பத்து உபயோகிக்கப்பட்டதோ அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுங்கூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடா வாட்டரோடாவது சேர்த்

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அறை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணு 8, வி. பி. சிலவுகள் 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்

26. சுகந்த மூக்குத்தூள்:—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க்கலந்து கொண்டால் அந்தத்தூள் முழுவதும் அதிகமனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது, தனிமையாக உபயோகப்படுத்துவது அனாவசியம் இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருக்கும். தலைவலி, பீனிசம், சலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர் பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தை நீக்கி சதா கமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம் போடுகிற வழக்கத்தை நாளுக்கு நாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்குப்போதுமானது. சீசா 1-க்கு விலை அணு 4, வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணு 3 பிரத்தியேகம், 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம், 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 7 பிரத்தியேகம்.

27. அசோக கிருதம்:—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டைகாலங்களில் வெகு கடினமான சூலை நோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெறிவு, தேகங்கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப்போகுதல் முதலிய ரஜாதோஷங்களும், யோனி சுருக்கம், யோனிப்புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற அவுஷதம். சூதக சூலை ரோகங்களுக்கும் மற்றும் அநேக யோனி சம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மைசெய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று. 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.